விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 15 திங்கட்கிழமை (29.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## அரச சார்பற்ற நிறுவனங்களின் கணக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு

(கொழும்பு)

இலங்கையில் செயற்பட்டு வரும் அனைத்துலக மற்றும் உள்ளூர் உதவி அமைப்புக்கள் தமது வங்கிக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான அரச செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இலங்கையில் பணி புரிந்து வரும் அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அனைத்துலக நிதி உதவியின் கீழ் இயங்கி வரும் உள்ளூர் உதவி அமைப்புக்கள் என்பன தமது வங்கிக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனின் விசேட பிரதிநிதி அடுத்த வாரம் இலங்கை வருகை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் விசேட பிரதிநிதி லியன் பெஸ்கோ எதிர்வரும் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் படையினர் மேற்கொண்ட இறுதி யுத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக அவர் இலங்கைக்கு விஜயம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது கைது செய்யப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சந்திப்பதற்குச் (20 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அரசியலமைப்பு ஒன்றை எவராலும் கொண்டு வர முடியாது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசியல் அமைப்பிலுள்ள சரத்திற்கு அமைய புதிய அரசியல் அமைப்பொன்றை எவராலும் கொண்டு வர முடியாது. நீதிமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் பொறுப்புக் கூறும் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி முறையே எதிர்பார்க்கப்படுவதாகவும் அரசு கூறியுள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவனின் படுகொலை

## சந்தேக நபரைக் கைது செய்ய சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபரை உடனடியாகக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துமாறு சாவகச்சேரி நீதவான் பொலிஸுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரியில் வைத்து கடத்தப்பட்ட மாணவனான திருச்செல்வம் கபில்நாத் நேற்று முன்தினம் அவரின் நண்பர் ஒருவரின் வீட்டு வளவிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவ (20 ஆம் பக்கம் பார்க்க)

## வரதராஜப் பெருமாள் நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணித் தலைவர் வரதராஜப் பெருமாள் நேற்று இலங்கைக்கு வந்துள்ளார். இந்தியாவில் இருந்து தனது கட்சியின் தேர்தல் பரப்புரை நடவடிக்கையினை முன்னெடுக்கும் நோக்கிலேயே அவரது பயணம் அமைந்துள்ளது.

மனைவி, மாமன் ஆகியோர் சகிதம் அவர் பயணித்ததாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (20 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவை விசாரணை செய்ய புதிய நீதிபதிகள் அடங்கிய குழு நியமனம்

## உறுப்பினராக யாழ்.கட்டளைத் தளபதி

(கொழும்பு)

இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான விசாரணைகளை மேற்கொள்ள புதிதாக 3 நீதிபதிகள் குழு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியின் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் குழுவின் தலைவராகப் பணியாற்றுவார் எனவும் தென் பிராந்தியப் பாதுகாப்புத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. (சா/த) பெறுபேறு அடுத்த வாரம் வெளியீடு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஏப்ரல் 9 ஆம் திகதிக்கும் 12 ஆம் திகதிக்குமிடைப்பட்ட காலத்தில் வெளியிடவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சுமார் (20 ஆம் பக்கம் பார்க்க)






# விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

லாண்ட் மாஸ்ரர்-மோட்டார்சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் இரவு நாரந்தனை பகுதியில் இடம் பெற்ற இவ் விபத்து சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த ஜோசுதாஸன் ருபேஸ்குமார் (வயது 36) என்பரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-3,30)


சொந்த மண்ணில் எந்தவித அடக்கு முறைகளையும் இல்லாது
துடைத்தெறிய – சிந்தியுங்கள்

எமது கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை உரிமையுடன்
பாதுகாக்க – ஒன்றுபடுங்கள்

தலைநிமிர்ந்து எல்லோர்க்கும் சரிநிகர் சமானமாக வாழும்
எதிர்காலத்தை நோக்கி முன்னேற – வாக்களியுங்கள்

X 1





மக்கள் துயர் துடைக்க
மீண்டும் ஒரு மகேஸ்வரன்...
தியாகராஜா துவாரகேஸ்வரன்
(சி-4865)



## தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வலியுறுத்தி தொடர்ந்தும்
உரத்துக் குரல்கொடுக்க
தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின்
இளம் வேட்பாளரும்
**யாழ்.இந்துவின் மைந்தனும்**
**யாழ்.பல்கலைக்கழக சட்டபீட மாணவனுமான**
**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.



X 8

யாழ்.இந்துவின் நண்பர்கள்
(சி-4866)


# கொலை செய்யப்பட்ட மாணவனின் புதவுடல் நேற்று நல்லடக்கம்

சாவகச்சேரியில் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவனின் சடலம் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வர்த்தகரின் மகனான திருச்செல்வம் கபில்நாத் (வயது 17) 30 மில்லியன் ரூபாய் கப்பம் கோரி கடந்த 14ஆம் திகதி கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது படுகொலை குறித்து பல்வேறு அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. (எ-5)

# இலங்கைக்கு 106 மில். டொலர்களை வழங்க ஈரான் அரசு முன்வருகை!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஈரான் 106.8 மில்லியன் டொலர்களை கடனாக வழங்க முன்வந்துள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில்அவைமேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையிலுள்ள ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார அபிவிருத்தி நடவடிக்கைகளைமேற்கொள்வதற்காக ஈரான் 106.8 மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

ஈரானின் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி இந்த உதவியை வழங்குவதாக ஈரானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கான தனது உதவிகளை அண்மைக்காலமாக அதிகரித்து வரும் ஈரான் இது வரையில் 1.5 பில்லியன் (1500 மில்லியன்) டொலர் உதவி திட்டங்களை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)


## தேவை

புத்தகம் கட்டுநர் தேவை. (பெண்கள் மட்டும்) கடமை நேரங்களில் நேரில் வரவும்.
சிவரஞ்சன் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
பலாலி வீதி,
கோண்டாவில்.
(981)



## காணி விற்பனைக்குண்டு

காரைநகர் பிரதான வீதியில் இருக்கும் 5 பரப்பு 3 பரப்பு மற்றும் கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777642379
(982)



## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் குடாநாட்டில் சகல பகுதிகளிலும் காப்புறுதி ஆலோசகராக யாழ். மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றி வரும் அரச காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.

### வேலை பற்றி

- 1 மாத பயிற்சி காலத்தை உடையது.
- பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### அடிப்படைத் தகைமை

- G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடசித்தி
- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையை (BIO DATA) 05.04.2010 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல.942
மே/பா.வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(942)



## சுயேட்சைக்குழு-10

அன்பார்ந்த யாழ். தேர்தல் தொகுதி தமிழ் மக்களே!



Dr.S.N. Thanihasalampillai
B.A, M.A, PhD.
SLEAS Class I,Dip. in Ed,Dip. in Ed Management.
Senior Consultant

- சுயநலத்துக்காக வீரவசனங்களைப் பயன்படுத்துவோரை நம்பி ஏமாற வேண்டாம்.
- பாராளுமன்ற உறுப்புரிமையைத் தமது சொந்த வியாபாரத்துக்காகவோ, சொகுசு வாழ்க்கைக்காகவோ பயன்படுத்துவோரின் கதைகளையும் நம்பி ஏமாற வேண்டாம்.
- அச்சுறுத்தல்களுக்கும் அடிபணிய வேண்டாம்.

கல்வி, விவசாயம், மீன்பிடி, பொருளாதாரத் துறைகளில் எமது மண்ணை மீண்டும் மிகச்சிறப்படையச் செய்யக்கூடிய, மக்களோடு மக்களாக இருந்து இக்கட்டான சூழ்நிலைகளிலும், துணிச்சலாகச் சேவை செய்த, செய்யக்கூடிய ஆற்றல் கொண்ட கலாநிதி க.நா.தணிகாசலம்பிள்ளையை ஆதரித்து வெற்றி பெற வாக்களியுங்கள்.

சுயேட்சைக்குழு-10 X 5

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

-யாழ்ப்பாணச் சமூக அபிவிருத்தி நலன்விரும்பிகள்
(சி-4863)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு கலைமாணி B.A (Hons) Hin பட்டம் பெறும் MR.கு.கோபிராஜ் அவர்களை பல்கலையும் பெற்று அரசடி சித்தி விநாயகர் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



செல்வன் குணரத்தினம் கோபிராஜ்

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

வாழ்த்துவோர்:
திரு.ஆ.குணரத்தினம்
குடும்பத்தினர்.
(984)



## லாலா
### லாலா நீல சலவை தூள்

எனது அன்புக்குரிய மாணவர்களே!
யாழ். குடாநாட்டில் தயாரிக்கும் தரமான தயாரிப்புக்களை வாங்கிப் பாவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் இங்கு விற்கப்படும் சில அந்நியப் பொருட்கள் வந்த பாதையைப் பார்த்து பாந்த்து திரும்பிச் சென்றுவிடும். இதற்கு எனது அன்புக்குரிய மாணவர்கள் உண்மையான மன உறுதி கொண்டு எங்கள் உற்பத்திப் பொருள் என்று மனம் சோராது ஒத்துழைப்பு தந்தால் யாழ். குடாநாட்டில் உள்ள தரமான தயாரிப்புக்கள் நிச்சயமாக முன் நிலைக்கே வந்து கொள்ளும்.
ஏன் கையேந்த [illegible], அச்சுவேலி.
(சி-492)

# இன்று ஒரு தகவல்

## மேலதிகாரி

ஒரு பெரிய கம்பனியின் பொது முகாமையாளர் பதவியிலிருந்து விலகினார். அவருக்கு அடுத்தபடியாக இருந்த ஒருவர் பதவியுயர்வு பெற்று அந்தப் பொறுப்பை ஏற்றார்.

ஏற்கனவே இருந்தவர் எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கியவர். மிகவும் திறமையான முகாமையாளர் என்று பெயரெடுத்தவர். அதனால் புதிதாக வந்தவர் அவரிடம் யோசனை கேட்டார். ''ஊழியர்களிடம் நல்ல பெயர் வாங்குவது எப்படி?'' என்று கேட்டார்.

இதற்கு அவர் சொன்னார். ஒரு திறமையான மேலதிகாரிக்கு இரண்டு திறமைகள் இருக்க வேண்டும். ஒன்று நேர்மை. இன்னொன்று சாமர்த்தியம்.

" நேர்மை என்றால் எப்படி?" என்று இவர் கேட்டார்.

''கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது தான் நேர்மை. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் எப்பாடுபட்டாவது வாக்குறுதியைக் காப்பாற்றி விடவேண்டும். அதுதான் நேர்மை'' என்றார் அவர்.

"சரி... சாமர்த்தியம் என்பது என்ன?" என்று கேட்டார்.

''அப்படிப்பட்ட வாக்குறுதி எதையும் கொடுக்காமல் இருப்பது தான் சாமர்த்தியம்''என்றார்.

''ஆக 'முகாமைத்துவம்' என்பது சாதாரண விடயமன்று. ஒரு முகாமையாளர் எப்படி இருக்க வேண்டும்? ஊழியர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என்பதைப் பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருப்பது நல்லது. அப்பொழுது தான் வேலை நடக்கும்.'' இது சம்பந்தமாக அமெரிக்காவில் 500 மேலதிகாரிகள் ஆய்வு நடத்தினார்களாம். அதிலிருந்து 5 விடயங்களை ரொம்ப முக்கியம் என்று கண்டுபிடித்திருக்கின்றார்கள். வரிசையாக சொல்கிறேன் கேட்டுக்கொள்ளுங்கள்.

ஒரு காரியம் நல்லபடியாக வெற்றிகரமாக நடந்து முடிகிறது. அந்த வெற்றிக்கு, வேலை செய்யும் பணியாளர்களும் காரணம் என்றால் அவர்களுக்கு அதில் பங்குண்டு என்றால் அதை மனதார ஒப்புக்கொண்டு பாராட்டுங்கள்.

அப்படிச் செய்யாமல் இருப்பது நேர்மையில்லை. ஏதோ எல்லாம் உங்களால் தான் நடந்தது என்பதுபோல் நடந்துகொள்ளாதீர்கள்.

இரண்டாவது எல்லோரிடமும் மிகவும் பரிவுடன் நடந்துகொள்ளுங்கள். அநாவசியமான அலுவலகத் தோரணைகள் வேண்டாம். மற்றவர்களுடைய உணர்ச்சிக்கும் ஆசைக்கும் மதிப்புக்கொடுங்கள்.

அதில் எல்லாம் உண்மையான அக்கறை காட்டுங்கள்.

'' அடுத்தமாதம் என் மகளுக்கு திருமணம் நடத்த இருக்கிறேன்'' என்று சொன்னால்,

" அப்படியா! சந்தோஷம் " என்று சொல்லி அவர் கேட்கும் லீவைக் கொடுங்கள்.

''வேலைகளான நேரத்தில் கல்யாணத்தை வைத்திருக்கிறாயே" என்று சொல்லி வெறுப்பேற்றாதீர்கள்.

மூன்றாவது எந்த விடயத்திலும் ' இது இப்படித்தான் இருக்கும்' என்று தீர்மானம் பண்ணாதீர்கள். உங்களுக்கு எது பிடிக்குமோ அதுதான் உண்மையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சில உண்மைகள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் சில பிரச்சினைகளுக்கு அதுதான் தீர்வென்றால் அதை நீங்கள் ஏற்றுத்தானாக வேண்டும்.

நாலாவது - ஒருவேலையை ஒருவரிடம் ஒப்படைக்கும் போது நீங்கள் தெளிவாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் அவர் குழம்பாமல் இருப்பார்.

உங்களுடைய பேச்சும் எழுத்தும் சுருக்கமாக இருக்கவேண்டும். வளவளவென்று இருக்கக் கூடாது. குறிப்பாக இன்னதைச் செய் என்று உத்தரவிடும்போது இது மிகவும் முக்கியம்.

ஐந்தாவது - உங்கள் அதிகாரத்திற்குட்பட்டு அவர்களுக்கு கிடைக்கவேண்டிய சௌகரியங்களை தாராளமாகக் கொடுங்கள். அவர்களுடைய உற்பத்தித்திறனால் தான் நீங்கள் மேலதிகாரியாக இருக்கிறீர்கள். அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நீங்கள் நல்ல மேலதிகாரி.

இவையெல்லாம் அனுபவத்திலிருந்து பெறப்பட்ட விடயங்கள். அதனால் இதை ஏதோ வெறும் உபதேசமென்று நினைத்து அலட்சியப்படுத்தவேண்டாம்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஊடகவியலாளர்கள் தங்களது சொத்துக்களின் விபரங்களை வெளியிட வேண்டும்

## சண்டே லீடர் செய்தி வெளியீடு

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குள் சகல ஊடகவியாலாளர்களும் தங்களது சொத்து விபரங்களை வெளியிட வேண்டுமென ஊடக அமைச்சின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் சொத்து விபர வெளியீடு தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய சகல பத்திரிகைகளினதும் உரிமையாளர்கள் ,செய்தி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட சகலரும் சொத்து விபரங்களை வெளியிட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஸ்ட ஊடகவியலாளர் , பிரசுரிப்பாளர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்கள் இந்தத் தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட் டுள்ள னர்.

இதன் மூலம் பயிலுனர் செய்தியாளர்களிடம் கூட சொத்து விபரங்கள் கோரப்படக்கூடிய நிலை காணப்படுவதாகத்தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை பொதுத்துறை ஊடக நிறுவனங்களுக்கே இந்தச் சட்டம் பொருத்தமுடையது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-6)

## தமிழக அகதி முகாம்களில் ஆய்வு நடவடிக்கை

(கொழும்பு)

தமிழகம் மதுரையில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆய்வினை தமிழக அகதிகள் சிறப்பு ஆய்வாளர் கிறிஸ்தோபர் நெல்சன் மேற்கொண்டுள்ளார்.

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மொத்தமாக 127 அகதிகள் முகாம்கள் உள்ளன. சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அகதிகளின் ஆவணங்கள் பரிசீலிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (6-9)

## இராசி பலன்

*29-03-2010*

*(பங்குனி 15, திங்கட்கிழமை)*

*சதுர்த்தசி முற்பகல் 10.42 மணிவரை*

*உத்தரம் முன்னிரவு 11.30 மணிவரை*

*இராகுகாலம் 7.43-9.13 மணிவரை*

*சுபநேரம் 12.13- 1.43 மணிவரை*

*மானிப்பாய் மருதடி விநாயகர் கொடி, தாவடி விநாயகர் கொடி, மூன்றாம் பங்குனித் திங்கள், பங்குனி உத்தரம் , பூரணை விரதம், நோன்மதி தினம்.*

| | |
|---|---|
| *மேடம்* | நோய் குணமடைதல், சத்துரு ஜெயம், எடுத்த காரியம் கைகூடும்,சுவாரஸ்யம். |
| *இடபம்* | புத்திரரால் கவலை, பணக் குறைவு ,வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| *மிதுனம்* | உறவினர் சந்திப்பு, தொழில் சிந்தை, கல்வியில் ஆர்வம், சுப செலவு. |
| *கடகம்* | அந்நியர் சந்திப்பு , பிராயண சுகம், தொழில் விருத்தி, காரிய நன்மை. |
| *சிங்கம்* | கடின வார்த்தை, கௌரவக் குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம். |
| *கன்னி* | சிந்தனை மிகுதி, அதிக பிரயாசை, நண்பர்கள் சந்திப்பு, தேக நலன். |
| *துலாம்* | மனச்சோர்வு, தொழில் நன்மை, பிறருக்கு உதவி செய்தல், பிரயாணம். |
| *விருச்சிகம்* | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், மனமகிழ்ச்சி. |
| *தனுசு* | அதிகாரம், இனியதகவல், முயற்சி பலிதம், விருந்துபசாரம். |
| *மகரம்* | திடீர் பயணம், தொழில் நன்மை, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம். |
| *கும்பம்* | எதிர்பாராத பகை, முயற்சி தாமதம், பண விரயம், ஆரோக்கியக்குறைவு. |
| *மீனம்* | களஸ்திர நன்மை, போசன சுகம், காரிய நன்மை,கலந்துரையாடல். |

வளவன்

## ஸ்பேஸ் றொக்கட் கழகத்தின் சைக்கிளோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மௌண்ட் லவனியா ஸ்பேஸ் றொக்கெற் விளையாட்டுக் கழகம் நடத்தும் சைக்கிளோட்டப்போட்டி 2, 3, 4 ஆம் திகதிகளில் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் வெற்றியீட்டும் முதல் இருபது போட்டியாளர்களை உள்ளடக்கி யாழ். மாவட்ட சைக்கிளோட்ட அணி உருவாக்கப்படவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புவோர். இன்று முதல் காலை 6 மணி தொடக்கம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களை 0777650965 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெறலாம். (6)




அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மாணவி ஒருவருக்கு கொப்பிகள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 45 | 50 | 50 |
| பச்சைமிளகாய் | 90 | 110 | 60 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 35 | 40 | 30 |
| புடோல் | 60 | 70 | 40 |
| வாழைக்காய் | 35 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 55 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 90 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 200 | 240 | 240 |
| போஞ்சி | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30. | 30 |

# வவுனியா முகாம் மக்கள் ஜூன் இறுதிக்குள் குடியேற்றப்படுவர்

## வவுனியா அரசாங்க அதிபர்

(கொழும்பு)

வவுனியா முகாம்களிலுள்ள சுமார் எண்பதினாயிரம் பேரும் எதிர்வரும் யூன் மாத இறுதிக்குள் குடியேற்றப்பட்டுவிடுவரென நம்பிக்கை தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் அடுத்தமாத இறுதிக்குள் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, வவுனியா வடக்குப் பகுதிகளிலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் தொண்ணூறு சதவீதமான கிராமங்களில் மக்கள் குடியேற்றப்பட்டுவிடுவரெனவும் கூறியுள்ளார்.

வவுனியா அகதிமுகாம் மக்கள் மற்றும் அவர்களது மீள் குடியேற்றம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றிற்கு அவர் வெளியிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தாவது, வவுனியாவில் கடந்த காலங்களில் 20 முகாம்களில் 2 இலட்சத்து 89 ஆயிரம் மக்கள் தங்கியிருந்தனர் . ஆனால் தற்போது நான்கு முகாம்கள் மட்டுமே இயங்குகின்றன. இவற்றில் சுமார் 80 ஆயிரம் மக்கள் உள்ளனர். இவர்கள் சுதந்திர நடமாட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனைவரும் எதிர்வரும் யூன் மாத இறுதிக்குள் குடியேற்றப்பட்டு விடுவர். அகதி முகாம்களில் தற்போது தங்கியுள்ள மக்களில் அங்கவீனமுற்ற அனைவரும் எதிர்வரும் முதலாம் திகதி விடுக்கப்பட்டு அவர்கள் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓமந்தையில் தொழில்நுட்பக் கல்லூரியொன்று 500 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. அதேபோன்று நெடுங்கேணியில் 100 மில்லியன் ரூபா செலவில் நீர் விநியோகத் திட்டமொன்றும் புதிதாக உருவாக்கப்படவுள்ளது.

வவுனியா பிரதேசத்திலுள்ள பாலமோட்டை, ஆறுமுகத்தான், புதுகுடியிருப்பு, மாளிகை, மருதங்குளம், இளமருதங்குளம், சேமமடு ஆகிய இடங்களில் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் ஏலவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் ஏழாயிரம் பேர் எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் இந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுவிடுவர். இந்தப் பிரதேசங்களில் கண்ணி வெடியகற்றும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. பாடசாலைகள், குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதில் 20 குளங்கள் வட மாகாண புனரமைப்புத் திட்டத்தின் கீழும் 5 குளங்கள் வடக்கின் வசந்தம் 2010 திட்டத்தின் கீழும் புனரமைக் கப்படுகின்றன. உள் வீதிகள் திருத்ததத்துக்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்துக்கான மின் விநியோகத்துக்கு 300 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தற்போது இவற்றில் 14 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த வருட இறுதிக்குள் திட்டம் முழுமை பெற்றதும் வவுனியா முழுவதற்கும் மின்சாரம் வழங்கக் கூடியதாகவிருக்கும். சமுர்த்தி பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் கோழி மற்றும் கால்நடைகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இந்தப் பிரதேசத்திலுள்ள 4000 ஏக்கர் நெற்காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் போகத்தில் மேலும் நாலாயிரம் ஏக்கர் காணிகளில் நெற் செய்கையை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மத்திய மாகாண அரசின் கீழுமான நீர்ப்பாசனக்குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் ஐரோப்பிய யூனியன், உலக வங்கி யு.என்.எய்ட் ஆகியவற்றின் உதவியுடன் வவுனியா மாவட்டத்தில் சுமார் ஐயாயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வீடும் தலா 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து வெளியேறியோர், வெளியேற்றவுள்ளோரின் அடிப்படைத் தேவைகளுக்கும் மற்றும் வாழ்வாதாரத்துக்கும் உதவிகளை வழங்குவதற்கு ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கென ஒரு திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது என்றார். (2-6)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 29.03.2010 இன்று காலை 9 மணிக்கு போயா ஆன்மீக சாதனை நிகழ்வு ஆரம்பமாகி பஜனை, தியானம், சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெற்று நண்பகல் 12.30 மணியுடன் நாராயண சேவையுடன் நிறைவடையும். அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம் பெறும் என்று யாழ். சத்திய சாயிசேவா நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (2)

## கிழக்கில் மூன்று வானொலி சேவைகளுக்கெதிராக முறைப்பாடு

கிழக்கு மாகாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மூன்று வானொலிச் சேவைகள் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமைந்துள்ளதென தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் தேர் தல் கண்காணிப்புக் குழுக்கள் முறைப்பாடு செய்துள்ளன.

இதில் காத்தான்குடி வானொலிச் சேவை மற்றும் ஹிஸ்புல்லா வனொலிச் சேவை ஆகியன 24 மணித்தியாலமும் சேவையில் ஈடுபட்டுவருவதாகவும் தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் குறிப்பிட்டுள்ளது. (2-6)

## பொன்சேகாவுக்கு ஆசிய நாடொன்றிலிருந்து பணம் வழங்கப்பட்டுள்ளது- ஆங்கில ஊடகம் செய்தி

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு ஆசிய நாடொன்றிலிருந்து பணம் வழங் கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனரல் சரத்பொன்சேகாவின் உறவினர்களது வங்கிக் காப்புப் பெட்டகங் களிலிருந்து 5 இலட்சத்து 27 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அண்மையில் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றினர்.

கடந்த ஜனவரி 26ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் குறித்த நாட்டைச் சேர்ந்த முக்கிய இராஜதந்திரியொருவர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகவும் குறித்த இராஜதந்திரியினால் வெளிநாட்டு நாணயங்கள் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்டிருக்கலாம் என புலனாய்வுப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறெனினும் குறித்த பணம் மக்களிடமிருந்து தமக்குக் கிடைக்கப் பெற்றதாக பொன்சேகா விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார். (2-6)




## பெரும்பான்மை மக்கள் மத்தியில்

# ஐ.தே.க. ஆதரவாளர்களை ஓரம்கட்ட அரசு முயற்சி -ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

தேசாபிமானம் என்ற பதத்தை பயன் படுத்தி அதற்கு தவறான விளக்கத்தைக் கொடுத்து ஐ.தே.க.வை ஆதரிப்பவர்களை பெரும் பான்மை மக்கள் மத்தியில் ஓரம் கட்டும் ஒரு கைங்கரியத்தை அரசு மேற்கொண் டுள்ள தாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி ஜானகி ஹோட்டலில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஜாதிக சேவக சங்கத்தின் (தேசிய சேவைகள் சங்கம்) மற்றும் கண்டி மாவட்ட அமைப்புகளின் தொழிற்சங்கத் தலை வர்களுடனான கூட்டத்தில் இதனைத் தெரி வித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித் ததாவது,

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் அரசாங் கம் சார்பில் நான்கு பிரமுகர்கள் பேச்சுவார்த் தைக்கு அனுப்பப்பட்டனர். இது நாடறிந்த உண்மை. இதில் அமைச்சர் மிலிந்த மொர கொட, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் இடம்பெற்றனர்.

இன்று அவர்களில் நான் மட்டும் எதிர ணியில் இருக்கிறேன். அதில் என்னை மட் டும் தேசத்துரோகி என அரச ஊடகங்கள் பிர சாரம் செய்கின்றன.

ஒரே பேச்சுவார்த்தைக்குச் சென்ற நால் வரில் மூவர் அரசுடன் இருப்பதனால் அவர் கள் தேசாபிமானிகள் எனப் போற்றும் அதே நேரம் எதிரணியில் இருப்பதன் காரணமாக என்னை தேசத்துரோகி என்கிறனர்.

இது தான் அரசு இன்று கையாளும் தேசாபிமான சித்தாந்தம். ஆனால் இது சிறு பான்மை மக்களிடத்தில் எடுபடுவதில்லை எனத் தெரிவித்தார். (2-6)

# மன்னார் பரப்பாங்கண்டல் பிரதேசத்தில் புதிய வீடுகள் அமைக்கும் பணி துரிதம்

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பரப்பாங் கண் டல் பிரதேசத்தில் துரித கதியில் புதிய வீடு களை நிர்மாணிப்பதற்கான அனைத்து ஏற் பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

பரப்பாங்கண்டல் பகுதியில் சுமார் 200 ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய் யப்பட்டுள்ளனர். பரப்பாங்கண்டல் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களில் கணிச மானோருக்கு மீள்குடியேற்றக் கொடுப்பன வுத் தொகை வழங்கப்பட்டிருக்கின்றது.

ஏனையோருக்கும் அதனை வழங்க ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செய லாளர் குறிப்பிட்டார். இவை தவிரவும் அப் பகுதிகளில் மீள்குடியேறியிருக்கும் மக்க ளுக்கான அடிப்படை வசதிகளையும் தேவை களையும் மேம்படுத்தும் பொருட்டு அனுமதி பெற்ற சில தன்னார்வத் தொண்டு நிறுவ னங்கள் மூலமாக தற்காலிக வீடுகள், நிரந் தர வீடுகள் உள்ளடங்கலாக பல தேவை களை யும் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுக ளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரி வித்தார். (2-6)

# பாடசாலை மாணவன் படுகொலை வன்மையான கண்டனத்துக்குரியது


## த.வி.கூட்டணியின் தலைவர்

பணத்திற்காக பதினேழு வயது மாண வனை கடத்திச் சென்று படுகொலை செய் கின்ற அளவிற்கு வன்முறை வேரூன்றியி ருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.


இப்படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட்டு கடுமையான தண்டனைக்குட்படுத்தப்படுவதோடு இவ் வாறான வன்முறைகள் மேலும் வளராத முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரி வித்துள்ளார்.

சாவகச்சேரியில் வர்த்தகர் ஒருவரின் மகனான திருச்செல்வம் கபில்நாத் 13 நாட் களுக்கு முன்னர் இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் நேற்று முன் தினம் புதை குழிக்குள்ளிருந்து பிணமாக மீட்கப்பட்டமை யாழ். குடாநாட்டு மக்கள் மத்தி யில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டோர் கடும் தண்டனை க் குட்படுத்தபட வேண் டும். இவ்விடயத் தில் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். ஆயுததாரிகள், வன் முறையாளர்களை கண்டால் உடன டியாக பாது காப்புத் தரப் பிற்கு தெரியப் படுத்த வேண்டும் ஆயுத வன்முறைக் கலா சாரத்தை இம் மண்ணில்வேரோடு இல்லாமல் செய் கின்ற போது தான் மக்கள் நிம்மதியாக பயம் இன்றி வாழ முடியும்என்றுமேலும் தெரிவித்தார். (2-6)

புதிய மெருகுடன்
இசைக்கொலுவேறிட..
புகழ்பெற்ற கலைஞர்களின் கைவண்ணத்தில்
யாழ்
சப்தஸ்வரா
இசைக்குழு
SAPTHASWERA MUSIC GROUP
உங்கள் விழாக்களை மெருகேற்ற அழைத்து மகிழுங்கள்..
தொடர்புகளுக்கு:-
ஸ்ரீருகன், விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு. 0776980573 / 0213216621
ஸ்கைவே எலெக்ரோனிக்ஸ், கல்வியங்காடு நியூ மாக்கெற். 0774108051
இரா.சிவராமன், சுமநல சேவை வீதி, முத்திரை சந்தி, நல்லூர். 077 4707820/077 8883720




வண்ணை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ விழாவின் தேர் உற்சவம் நேற்று காலை 8 மணிக்கு நடைபெற்ற வேளையில் அம்பாள் தேரில் எழுந்தருளி வருவதைப் படத்தில் காணலாம். (படம் :-கங்கா)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லு னர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட கல்லூரியின் ஓய்வு பெற்ற பகுதித் தலைவர் த.சர்வானந்தாவும் அவரது பாரியாரையும் பாடசாலை அதிபர் ந.தெய்வேந்திராசா மற்றும் ஆசிரியர்கள் அழைத்துவருவதை படத்தில் காணலாம்.



வடமராட்சி வலய கணித மூலவள நிலையத்தில் கடமையாற்றிய கணிதபாட சேவை ஆலோசகர் எஸ்.இராமகிருஸ்ணாவுக்கு வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல் வராசா பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.



அச்சுவேலி வட்ட அரிமா கழகத்தினர் அண்மையில் தந்தையை இழந்த குழந்தை ஒன் றின் வாழ்வாதாரத்திற்காக ரூ.10 ஆயிரத்திற்கான வங்கி வைப்பு சான்றிதழை அச்சு வேலி தேசிய சேமிப்பு வங்கி ஊடாக வழங்குவதை படத்தில் காணலாம்.

# சர்வதேச கல்விக் கண்காட்சியில் பெருமளவானோர் பங்கெடுத்தனர்

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று நடைபெற்ற சர்வதேச கல்விக் கண்காட்சியில் பெருமளவானோர் பங்குபற்றினர்.

சென்பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கண்காட்சியில் இந்தியாவிலிருந்து 7 பேரும் கொழும்பிலிருந்து 15 பேரும் கொண்ட பல்கலைக்கழக நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட ஏனையவர்களுக்கும் வெளிநாட்டு உயர்கல்வி தொடர்பான விளக்கங்களை வழங்கியிருந்தனர்.

கடந்த 15 வருடங்களாக கொழும்பில் நடைபெற்ற கண்காட்சி தற்போது யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு வருவது மாணவர்களின் எதிர்கால வெளிநாட்டு கல்வி நடவடிக்கைகளுக்கு மிகவும் உந்துசக்தியாக அமையும் எனவும் குறிப்பாக க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்கள் தெரிவுசெய்ய பாடநெறிகளை அந்த நாடு களில் கற்கலாம் என்பது பற்றிய அறிவை பெற்றுக் கொள்ள ஓர் வழிகாட்டல்களை தாம் வழங்குவதாகவும் ஸ்கொலர் இன்போ மெஷன் நிலையத்தின் பணிப்பாளர் பீற்றர் செல்வராசா தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பான மேலதிக விரபங்களை அறிய விரும்புவர்கள் இல 734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொள்கின்றார். (6-30)

# சிறுவர் உரிமையை பாதுகாப்பதில் ஊடகவியலாளர்களுக்கும் பங்குண்டு

## சிறுவர் உரிமைகள் பங்களிப்பு ஆலோசகர்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றினை அண்மையில் யூரோவில் மண்டபத்தில் நடத்தியது.

இதன்போது சிறுவர் உரிமைகள் தொடர்பான அடிப்படை விளக்கம் ,யாழ். மாவட்டத்தில் சிறுவரின் பாதுகாப்பு சம்பந்தமாக உள்ள பிரச்சினையை இனம் காண்பது, ஊடகவியலாளர்கள் பின்பற்றும் அணுகுமுறைகள் என்பன பற்றி விளக்கங்களை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த சிறுவர் உரிமைகள் பங்களிப்பு ஆலோசகர் ஒலிவெட் ஜெனோலா அல்பிரட் வழங்கியிருந்தார்.

ஒவ்வொரு நாளும் உலகில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சிறுவர் நலன் கருதி உருவாக்கப்பட்ட சிறுவர் சமவாயக் கோட்பாடுகள், சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் என்பன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் சிறுவர்களின் உரிமைகள் மீறப்பட்டு பாதகமான விளைவுகள் ஏற்படும் போதும் சிறுவருக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் அதேவேளை மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையிலும் செய்தியை பிரசுரிக்க வேண்டியது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும் என்றார். (6-30)

# அவை இலக்கிய விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அவை (FORUM) ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பிரதம பேச்சாளர்களுக்கு 'அவை இலக்கிய விருது' வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி த.கலாமணி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினர்களாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், காரைநகர் பிரதேச செயலர் ரீ.ஜெயசீலன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்), க.நடேசு (தெணியான்), பொன்.ஸ்ரீ வாமதேவன், குப்பிளான் ஐ.சண்முகன், சி.வள்ளியகுலம், பா.தனபாலன், இ .இராஜேஸ்கண்ணன், பெ.அரவிந்தன், த.அஜந்தகுமார் ஆகியோர் சிறப்பு கௌரவம் பெறுகின்றனர். (2)

# மாகாண மட்ட நிலையறி பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 3 தொடக்கம் 9 வரையான மாணவர்களிற்கு தமிழ், கணித பாடங்களிற்கான மாகாண மட்ட நிலையறி பரீட்சை நாளை செவ்வாய் காலை 8.30 மணி தொடக்கம் தென்மராட்சியின் சகல பாடசாலைகளிலும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது என்றும் மாணவர்களை தமது பாடசாலைகளிற்கு தவறாது சென்று பரீட்சை எழுதும் படியும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயத்தின் கட்டாயக் கல்விக் குழுவை வலுப்படுத்துவதற்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட உள்ள இப்பதவிக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்றும் மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர் விரும்பத்தக்கது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பதாரிகள் தமது சுய விபரக் கோவையுடன் நாளை மறுதினம் புதன் முற்பகல் 9 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

# யாழ்.மருத்துவபீடத்தில் நடந்த அவசரகால மருத்துவப் பராமரிப்பு

(யாழ்ப்பாணம்)


இலங்கை சத்திர சிகிச்சை நிபுணர்களின் கல்லூரி அதனுடைய யாழ்ப்பாணக் கிளையுடன் இணைந்து உலக சுகாதார நிறுவனம், சுகாதார அமைச்சு, யாழ் மருத்துவ சங்கம் என்பவற்றின் அனுசரணையுடன் அவசர கால மருத்துவப் பராமரிப்பு தொடர்பான விரிவுரைகள், செய்முறை விளக்கங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை 27,28ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடத்தியது.

யாழ்ப்பாண மாவட்டத்தினுடைய அவசர கால சிகிச்சை முறைகளை செயற்றிறன் மிக்கதாக்கும் நோக்குடன் வழங்கப்படும் இந்தப் பயிற்சிகளை தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த பல சத்திரசிகிச்சை நிபுணர்களும் மயக்க மருத்துவ நிபுணர்களும் யாழ். மாவட்ட நிபுணர்களுடன் இணைந்து வழங்கினார்கள்.

இந்தப் பயிற்சிகள் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்டது. பயிற்சிகளிற்கு இடையே 'சாளரம்' எனும் கலை நிகழ்வுகளின் தொகுப்பும் நேற்று முன்தினம் மாலை மருத்துவ மாணவர்களால் வழங்கப் பட்டது. (ந)








யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடைபெற்ற அவசர பராமரிப்பு பயிற்சிப்பட்டறை ஆரம்ப விழாவின்போது சத்திர சிகிச்சை நிபுணர்களின் கல்லூரியினது தற்போதைய தலைவர் வைத்திய கலாநிதி ரஞ்சித் எல்லாவல, உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி வைத்திய கலாநிதி ந.சிவராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.சிவபாலன், சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.ராஜேந்திரா ஆகியோர் உரையாற்றுவதையும், தொடக்க நிகழ்வுகளில் பங்குபற்றிய ஒரு தொகுதியினரையும் மேலே உள்ள படங்களில் காணலாம்




# தடகளப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெறவுள்ள இறுதி தடகளப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. -(6-30)

# விளையாட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலய பெரு விளையாட்டுக்களில் 15,17,19 வயதுப்பிரிவினரிடையே நடைபெறவுள்ள ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்று முற்பகல் 8.30 மணிதொடக்கம் பிற்பகல் 5 மணிவரை யாழ். புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 3ஆம் திகதியன்று ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கம், பூப்பந்தாட்டம், கரம் போன்ற உள்ளக விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளன.

நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, வேலணை போன்ற இடங்களிலுள்ள தீவகப் பாடசாலைகளைச் சேர்ந்த போட்டியாளர்களை உரியநேரத்திற்கு போட்டிக்கு அனுப்பிவைக்குமாறு தீவகம் மற்றும் வேலணை வலயக் கல்விப் பணிமனை கேட்டுக்கொண்டுள்ளது. (6-30)

# பொன்னான வாய்ப்பை கைவிட வேண்டாம்

# பிரபாகரனுக்கு ஆனந்தசங்கரி கடிதம்

**26.07.2008 அன்று வீ.ஆனந்தசங்கரியினால்**

**பிரபாகரனுக்கு எழுதிய கடிதம்**



*அன்புடைய தம்பி,*

*மீண்டும் ஓர் பொன்னான வாய்ப்பு*

எனது கடிதங்கள் எதையும் நீர் இதுவரை பொருட்படுத்தவில்லை. நீர் உட்பட மக்களுக்கு தேவையான அமைதியை கொடுக்கக்கூடிய இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரமான தீர்வை எட்டக்கூடிய ஒரு பொன்னான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென்பதை உமது கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இக் கடிதத்தை எழுதுகிறேன்.

எமது நாட்டையும் அதன் மக்களையும் அழிவிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட கட்டாயப்படுத்தப்பட்டுள்ளேன். உமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் உள்ள மக்களை விடுவிக்க வேண்டிய தார்மீக கடமை எனக்குண்டு. கிளிநொச்சி மக்களோடு வாழ்ந்து வளர்ந்து அம் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி கிராமசபை தலைவராகவும் கிளிநொச்சியின் நகரசபையின் முதல் தலைவராகவும் பணியாற்றியதை நீர் அறிவீர்.

ஆகவே வன்னிப்பகுதி மக்கள் மீது எனது அக்கறை எவ் வளவு என்பதையும் நீர் விளங்கிக் கொள்வீர். தினமும் அரிய உயிர்கள் யுத்தகளத்தில் இழக்கப்படுகின்ற அதே வேளை உமது போராளிகளால் பிரயாணிகளின் பேரூந்துகள், படையினரின் பேரூந்துகள் , புகையிரதம் ஆகியன கிளேமார் , கண்ணிவெடி , கைக்குண்டு , குண்டு ஆகியவற்றால் இலக்கு வைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் பலர் உயிர் இழக்கின்றனர். எரியும் பேரூந்துகளிலிருந்து அதிர்ஷ்டவசமாக தப்பியோடும் அப்பாவிகளையும் , சேனை விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஏழை அப்பாவிகளையும் உமது போராளிகள் விட்டு வைக்கவில்லை. காரியாலயத் தொழிலாளர்கள் , ஆசிரியர்கள், மாணவர்கள் ,சிறுவர் , சிறுமியர் , கர்ப்பிணிகள் , முதியோர் ஆகிய இவர்களும் இதில் அடங்குவர். உமது அர்த்தமற்ற எவருக்கும் எதுவித பிரயோசனமும் தராத யுத்தத்தால் 70 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் பலிகொள்ளப்பட்டுள்ளன. அனேகர் தமது கணவரையோ , மனைவியையோ பிரதான உழைப்பாளியையோ இழந்துள்ளனர். சிலர் கண்பார் வையையும் , கை , கால்களையும் இழந்துள்ளனர்.

உம்மால் உருவாக்கப்பட்ட அநாதைகள் குறைந்த எண்ணிக்கையல்ல. பல்வேறு சமூகத்தைச் உருவாக்கப்பட்ட அநாதைகள் குறைந்த எண்ணிக்கையல்ல. பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் எத்தனை பேரை பலி எடுத்துள்ளீர்? தமது முன்னாள் பிரதமரை கொடூரமாக படுகொலை செய்தமையை இந்தியா என்றும் மன்னிக்குமா? பல சமூகத்தையும் சேர்ந்த பல்வேறு தலைவர்களை நீர் படுகொலை செய்தமையை இலங்கை மக்கள் மன்னிப்பார்களா? உம்மால் படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள் உம்மை மன்னிப் பார்களா? உம்மால் அழிக்கப்பட்ட பல பல கோடி பெறுமதியான தனியார் , பொது சொத்துக்கள் பற்றி என்ன கூறுகிறீர்? உம்மால் அழிக்கப்பட்ட ரயில் பெட்டிகள், எஞ்ஜின்கள் , பஸ்கள் , தொலைபேசி கம்பங்கள் , மின்சார கம்பங்கள் , கேபிள்கள் என்பவற்றின் பெறுமதி என்ன?

தலைமன்னார் தொடக்கம் மதவாச்சி,காங்கேசன் துறை தொடக்கம் வவுனியா , மட்டக்களப்பு பாதையிலும் மொத்தம் 200 கி.மீ தூரத்திற்கு மேற்பட்ட பாதையில் தண்ட வாளங்கள் , சிலிப்பர் கட்டைகள், கற்கள் எதையும் நீர் விட்டுவைக்கவில்லை. பல வருட காலமாக பிள்ளைகளை குப்பி விளக்கு வெளிச்சத்திலும் , நிலவு வெளிச்சத்திலும் படிக்க விட்டீர்.

ஆறு மணித்தியால நேரத்தில் கொழும்புக்கு வர வேண்டிய நேரத்தை 36-48 மணி நேரம் வரை நீடிக்க வைத்து விட்டீர். மக்களை பட்டினி போட்டீர். யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு பெரும் தொகையான மக்கள் இடம்பெயரும் போது இறந்தவர்கள் எத்தனை பேர்? சுதந்திரமாக வாழ்ந்த மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவதாக கூறி அவர்களை அடிமைப்படுத்தினீர். வடக்கு கிழக்கு பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு இனியும் இழப்பதற்கு பெரிதாக ஒன்றும் இல்லை. ஏழைகள் படு ஏழைகளாகவும் பணக்காரர் பிச்சைக்காரர்களாகவும் ஆக்கப்பட்டனர். பல இலட்சக்கணக்கான மக்கள் தங்க ஆபரணங்கள், வீடுகள் உட்பட அத்தனையையும் இழந்தனர். சிலர் கணவன்மாரை இழந்தனர். பலர் தம் பிள்ளைகளை இழந்தனர். ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகளை நீர் பலாத்காரமாக பிடித்துச் சென்று அவர்களுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்து விட்டு அவர்களை மனித குண்டுகளாக்கி அவர்களின் உடல்களை சிதறவைத்தீர். இவை அனைத்தும் தமிழ் முஸ்லிம் மக்கள் பட்ட துன்பத்தில் ஒரு சிறு பகுதியே. அகதி முகாம்களில் முஸ்லிம் சகோதரர்கள் பலர் 15 ஆண்டுகளுக்கு மேல் வாடுகின்றனர். அதேபோல் சில தமிழர்களும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மக்களுக்கு கொடுக்கும் பெரும் வேதனை இத்தனை துன்பங்களை அனுபவித்த பின்பும் ஆங்கிலத்தால் எழுதக்கூடிய சில சிங்கள எழுத்தாளர்கள் என்றோ மறைந்து போன சீதனப் பிரச்சினை, சாதிப்பிரச்சினை பற்றி கூறுவதாகும். சிலர் நான் எவரிடமும் காணாத யாழ்ப்பாண மக்களின் உயரிய பாகுபாடு மனப்பான்மை பற்றிப் பேசுகின்றனர்.

இன்று யாழ்ப்பாணத்து மக்கள் மிகக் கீழ்மையான நிலையில் இருந்து கொண்டு அனுதாபத்துக்கும் ஆதரவுக்கும் ஆளாகியுள்ளனர். இதைத் தவிர ஓர் சாதாரண சிங்கள மகனை சட்டத்திற்கு பயந்த நல்லடக்கமும் , மரியாதையுள்ள மனிதனாகத்தான் நான் காண்கிறேன். அவர்கள் தமிழ் மக்கள் மீது எந்த விதமான விரோதமும் காட்டுவதில்லை. தமிழர்களோடு சம உரிமையுடன் வாழ விரும்புகின்றனர். தென்னிலங்கையில் வாழ்கின்ற அரைவாசிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் மீது முழு அனுதாபத்துடனும் நட்புட னும் சமாதானமாகவும் அமைதியாகவும் உமது கட்டுப்பாட்டில் இருந்து போது வாழ்ந்த நிலையிலும் பார்க்க மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்கின்றனர்.

தயவு செய்து உமது நடவடிக்கைகள் அத்தனையும் நிறுத்தவும். யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் அமைந்திருந்த சிங்கள மகாவித்தியாலயங்களில் ஆயிரக்கணக்கான சிங்கள மாணவர்கள் கல்வி கற்றனர். சிங்கள பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான தமிழ் பாடசாலைகள் அன்றும் இருந்தன. இன்றும் இருக்கின்றன. அன்று எங்கும் சமாதானம் நிலவியது. யாழ். மாநகரசபையின் சிங்கள உறுப்பினர்களும் , முஸ்லிம் மேஜர்களும் இருந்து இருக்கின்றனர். சிங்கள , தமிழர் ,முஸ்லிம் மக்கள் மத்தியில் எதுவித முரண்பாடுகளும் இருக்கவில்லை. நாம் சமாதானமாகவே வாழ்ந்தோம். நாடு முழுவதும் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களின் தமிழ் அங்கத்தவர்கள் , உப தலைவர்கள் , தலைவர்கள் அனேகர் பணியாற்றுகின்றனர்.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரம் நாட்டின் வரலாற்றின் ஒரு கறுப்புப்புள்ளியே. அது திட்டமிட்டு நிறைவேற்றப்பட்ட ஒரு செயலாகும். இன்றும் நாடு முழுவதிலும் பல்லின மக்களும் பூரண சமாதானமாக வாழ்கின்றனர். தமிழர்கள் இழப்பதற்கு இனி ஒன்றும் இல்லை. உமது கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களை அழிவை நோக்கி அழைத்துச் செல்கிறீர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்க ளின் அரைவாசி பேர் இன்று இல்லை. இந்த வருடம் மட்டும் யுத்த முனையில் 5ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களை நீர் பலி கொடுத்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சிங்களவ ரோ, தமிழரோ ,முஸ்லிம்களோ எவரிலும் ஓர் உயிரைத் தானும் இனி இழக்க நான் தயார் இல்லை. நம் இலங்கையரைத் தவிர உலகம் பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளது. உமது நடவடிக்கை கள் தமிழ் மக்களின் முன்னேற்றத்தை பூரணமாகவும் சிங்கள முஸ்லிம் மக்களின் முன்னேற்றத்தையும் பெருமளவில் பாதித்துள்ளது.

இதோ மீண்டும் ஒரு பொன்னான வாய்ப்பு உம்மைத் தேடி வருகிறது. இந்த வாய்ப்பு ஆண்டவனால் அழிக்கப்பட்ட இந்த வாய்ப்பை இறுகப்பற்றிக்கொள்ளவும் கொழும்பில் விரைவில் கூடவுள்ள சார்க் நாடுகளின் மாநாட்டில் சார்க் நாட்டுத்தலைவர்கள் ஒன்றுகூடி தத்தம் நாடுகளில் உள்ள பிரச்சினைகள் பற்றி சந்தித்துப் பேசவுள்ளனர்.

அதில் மிக முக்கிய பிரச்சினை பயங்கரவாதப்பிரச்சினையாகும். எனது கருத்தின் படி நீர் ஒருவர் மட்டும் தீர்மானித்தால் பயங்கரவாதத்தை ஒரு நாளைக்கு அற்றுப் போகச் செய்யலாம். சார்க் மாநாடு நேரம் உமது ஒரு தலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை பெரும் கேலிக் கூத்தாகவே எடுத்துக்கொள்வர். என்னுடைய ஆலோசனையை ஏற்று பின்வரும் 5 பிரகடனங்களை உடனடியாக மேற்கொள்வீரானால் சார்க் நாடுகளின் தலைவர்கள் உட்பட அனைவரும் எமது பிரச்சினையில் அக்கறை கொள்வர். சார்க் மாநாட்டுத் தலைவர்களுக்கு இலங்கை இனப்பிரச்சினையிலும் பார்க்க வேறு முக்கிய பிரச்சினை இருக்கும் என்று நான் நம்பவில்லை. ஆகவே அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையின் இனப்பிரச்சினை இடம்பெற்றால் ஆச்சரியப்படுவதிற்கில்லை. எது எப்படி இருப்பினும் பயங்கரவாதம் விவாதிக்கப்படவிருக்கும் ஒரு விடயமரக இருப்பதால் எமது இனப்பிரச்சினையும் விவாதிக்கப்படலாம். ஆகவே பின்வரும் பிரகடனத்தை செய்யுமாறு உம்மை கேட்டுக்கொள்கின்றேன்.

1.ஒரு தலைப்பட்சமாக ஓர் நிரந்தர போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்தி இலங்கை அரசையும் அவ்வாறு செய்ய கோரவும்.

2.இறுதியாக இனப்பிரச்சினை தீரும் வரை ஆயுதத்தை எந்த விதத்திலும் உபயோகிக்க மாட்டேன் என்று கூறி ஆயுதத்தை கீழே வைப்பதாகவும்,

3. பிரிவினை கோரிக்கையை கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண சம்மதிப்பதாகவும்,

4.சார்க் நாட்டுத் தலைவர்களை மத்தியஸ்தர்களாக ஏற்பதாகவும் ,

5.சார்க் நாட்டு தலைவர்களின் சிபாரிசை தீர்வாக ஏற்பதாகவும்,

பிரகடனப்படுத்தவும்.

சர்வதேச சமூகம் முற்றுமுழுதாக உமது தனிநாட்டுக் கோரிக்கையை நிராகரித்து இருப்பதை நீர் அறிவீர்.பிரிவினை கோரிக்கையை கைவிட சம்மதிக்கும் பட்சத்தில் முழு உலகில் குறிப்பாக சார்க் நாடுகள் இந்தியாவின் தலைமையில் எமது பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவ முற்படுவர். இது ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு ஜனநாயகப்பாதைக்கு திரும்புவதற்கு நல்லதோர் வாய்ப்பாகும். நீர் ஜனநாயகப் பாதைக்கு திரும்புவதற்கு கிழக்கு மாகாணத்தில் நடப்பவையே நல்ல முன்னுதாரணமாக கொள்ளலாம். நிர்வாகத்தில் பங்குகொள்வதற்கு உமக்கு பெரும் வரவேற்பு கிடைக்கும். என்னைப் பொறுத்தவரையில் நீர் ஜனநாயகப்பாதைக்கு திரும்புவதற்கு வேண்டிய சகல உதவியையும் மேற்கொள்ள முடியும். இந்த விடயத்தில் நிர்வாகத்தில் பங்கெடுப்பது உட்பட நான் எந்தவித நன்மையையும் பெறப்போவதில்லை. நாட்டின் கடும் போக்காளர்கள் கூட தமது நிலைப்பாட்டை மாற்றி திருப்திகரமான தீர்வை காண மகிழ்ச்சியுடன் ஒத்துழைப்பர் என்பதை நம்பிக்கையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எமது இனப்பிரச்சினை சார்க் உச்சி மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறுமா என்பது தெரியாது. ஆனால் நிச்சயமாக பயங்கரவாதம் ஒரு நிகழ்ச்சியாக இருப்பதால் இனப்பிரச்சினை பற்றி பேசுவது தவிர்க்க முடியாதது ஆகும்.

ஆகவே எனது ஆலோசனையை ஏற்று உமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும். அதேநேரம் இனப்பிரச்சினை சம்பந்தமாக சார்க் நாடுகளின் தலைவர்களுடன் பேச வேண்டும் என்று ஜனாதிபதி அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

(த-4857)

**தமிழ் மக்களின் பிரச்சினையை துணிச்சலுடன் உலகறியச் செய்த மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.**

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

X

# அப்பாவி மாணவனின் படுகொலை மிலேச்சத்தனமான நடவடிக்கையாகும்

## விஜயகலா மகேஸ்வரன் கண்டனம்

சாவகச்சேரி பகுதியில் கடத்தப்பட்ட அப்பாவி மாணவன் திருச்செல்வம் கபில்நாத் படுகொலை செய்யப்பட்டுள்ளமை கண்டிக் கத்தக்கதாகும். இந்த மாணவனின் படுகொலை குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாணவனும் பிரபலவர்த்தகர் திருச்செல் வத்தின் மகனுமான கபில்நாத்தின் படு கொலை யினைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கை யிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது,

கடந்த இரு வாரங்களுக்கு முன் கடத் தப்பட்ட மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள் ளமை குடாநாட்டு மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.மீண்டும் கடத்தல், காணாமல் போதல் யுகம் ஆரம்பித்துவிட் டதா? என்ற அச்சத்தையும் இந்தச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

கடத்தப்பட்ட மாணவன் கப்பம் கோரப் பட்டுள்ள நிலையிலேயே கொல்லப்பட்டுள்ள தாக தகவல் வெளியாகியுள்ளது. மாணவனின் சடலம் காணப்படுவதாக தகவல் கிடைத்தும் அந்த இடத்துக்கு நான் நேரில் சென்று பார்த் தேன்.

யுத்தத்தின் பின் கடத்தல்கள், காணாமல் போதல்கள் சம்பவங்கள் பெரியளவில் இடம் பெறவில்லை. தற்போதைய சூழ்நிலையில் கப்பம் கோரி கடத்தும் நிலையில் உள்ள வர்கள் யார்?

பணத்துக்காக படுகொலை செய்பவர்கள் யார் என்பதை மக்கள் இனம் காண வேண்டும். பணத்துக்காக பாலகனைக் கொலை செய்யத் துணிந்தவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும். குற்றவாளிகள் தப்பிக்க இடமளிக்கக் கூடாது. (ந)

# மாணவன் கபில்நாத் படுகொலை இரத்தத்தை உறைய வைக்கிறது

## மாவை சேனாதிராஜா அதிர்ச்சி

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபில்நாத் இரண்டு வாரங் களுக்கு முன்னர் இனந்தெரியாத ஆயுதக் கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்ட செய்தி கசிந்து கொண்டிருந்தது.

இந்த மாணவன் விடுவிக்கப்பட வேண்டு மானால் மூன்று கோடி ரூபா பணம் வேண்டு மெனப் பேரம் பேசப்பட்டதாகவும் செய்திகள் வந்தன. இந்த மாணவனின் தந்தை திருச் செல்வம் யாழ்ப்பாணத்தில் அருள்விநாயகர் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர் எனவும் அறிகின்றோம்.

நேற்றுவரை இந்த மாணவன் கடத்தப் பட்டது தொடர்பில் பொலிஸாரினால் நியாய மான எந்தவித விசாரணைகளும் மேற் கொள்ளப்பட்டதாகவோ அல்லது மாணவன் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ செய்திகளில் லை.

இப்பொழுது அந்த அப்பாவி மாணவன் கபில்நாத் கொலை செய்யப்பட்டுப் புதை குழியில் புதைக்கப்பட்டு எடுக்கப்பட்டுள்ள தான செய்தி வந்திருக்கிறது.

இப்பொழுதும் கடத்தல், கப்பத்திற்காகக் கொலை செய்யப்படுதல் அதுவும் மாணவன் படுகொலை செய்யப்பட்டிருப்பதான நடவடிக் கை தொடர்கின்றமை இரத்தத்தை உறைய வைக்கிறது, அதிர்ச்சி அளிக்கிறது.இக் கடத்த லுக்கும் கொலைக்கும் காரணமான சக்திகள் அடையாளம் காணப்பட வேண்டும். அதற்கான விசாரணையை அரசு தொடங்க வேண்டும். கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இனிமேலும் இப்படியொரு கடத்தல், கொலை, வன்முறைச் சம்பவம்இடம்பெறாத வகையில் நாமும் மக்களும் கண்டனம் தெரி விப்பது மட்டுமல்ல எதிர்ப்பை அமைதியான வழிகளில் வெளிப்படுத்த வேண்டும் என வேண் டுகிறோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது. (ந)

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்ட மட்ட பாடசாலை மாண வர்களுக்கிடையேயான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் முத்து தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.


இப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி, கொக் குவில் இந்துக்கல்லூரி, முத்துதம்பி மகாவித் தியாலயம், செங்குந்தா இந்துக் கல்லூரி, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஸ்ணன் மற்றும் இந்து மகா வித்தியாலம் ஆகியவை பங்கு பற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-30)


# பாராட்டு வைபவம்

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் 2009 ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர் களையும் பாராட்டும் வைபவம் இன்று திங்கட் கிழமை மாலை 2 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அச்சுவேலி வட்ட அரிமாக்கழகத் தலை வர் லயன் ஏ.கே.இராமநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.


சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திர வடிவேல், மாவட்ட கபினெற் செயலாளர் லயன்.டி. ஸ்ரீபன் லியனாட் எம்.ஜே.எவ் , அச்சுவேலி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி பு. கணபதிப்பிள்ளை , யாழ். மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ். தங்கராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர். (6)

















யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச கல்விக்கண்காட்சி நேற்று சென்.பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்லூரி அதிபர் அருட்திரு ஜெறோ செல்வ நாயகம் ஆகியோர் மங்கல விளக்கேற்று வதையும், கல்லூரி அதிபர்,மாநகரமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்று வதையும், கொழும்பு ஸ்கொலர் இன்போமேஷன் நிலையத்தின் பணிப்பாளர் பீற்றர் செல்வராஜா அமைச்சருடன் உரையாடுவதையும், கண்காட்சியைப் பார்வையிடும் மாணவர்கைளையும் படங்களில் காலணாம். (படங்கள்:- டுசாந்தன்)






மூத்த பிரஜைகள் பேரவையால் நடத்தப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் லயன் வ.பரமசிவத்திற்கு மக்கள் வங்கி முகாமையாளர் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌரவிப்பதையும், அருகில் பேரவைத் தலைவர் நிற்பதையும், லயன் சீமாட்டி சரஸ்வதி பரமசிவத்திற்கு சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி ஜெயமணி யோசப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும்; பொருட்களை அன்பளிப்புச் செய்த திருமதி ஜெறாம் இராஜேந்திரன் மூத்த பிரஜையை வாழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# பொதுமக்களுக்கு சேவையாற்றுவோரே அரசியலில் நிலைத்திருக்க முடியும்

## மங்கள சமரவீர



(கொழும்பு)

அரசியல் என்பது நாட்டுக்கு ஒப்பாகாது என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியலில் நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டுமாயின் அவர்கள் பொது மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். சேவை செய்தவதாக கூறிக்கொண்டு நடமாடிக் கொண்டிருந்தால் பொதுமக்கள் மத்தியில் நிலைத்திருக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# தேர்தல் மோசடிகளைத் தடுக்கும் நோக்கில் ஒரு இலட்சம் ஆதரவாளர்களை கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்த எதிர்க்கட்சிகள் திட்டம்

(கொழும்பு)

தேர்தல் மோசடிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுமார் ஒரு இலட்சம் ஆதரவாளர்களை நாடு முழுவதிலும் கண்காணிப்புப் பணிகளில் அமர்த்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. குறிப்பாக ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இந்தத் தீர்மானத்தை எடுத் துள்ளன.

வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களில் இந்த ஒரு இலட்சம் பேர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி இந்தக் கட்சி ஆதரவாளர்கள் நாடு முழுவதிலும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வார்கள் என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவித்த அவர் சுதந்திரமானதும், நியாயமானதுமான முறையில் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான ஓர் பின்னணியை உருவாக்க எதிர்க்கட்சிகள் உத்தேசித்துள்ளதாக கூறினார்.

மேலும் பிரச்சினை ஏற்படக் கூடிய பிரதேசங்களில் மேலதிக பாதுகாப்பினை வழங் குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் மோசடிகளை தடுப்பது தொடர்பில் தமது ஆதரவாளர்களுக்கு ஏற்கனவே பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (6)

# முறிகண்டி பிள்ளையார் முன் நிறுத்தாது செல்லும் வாகனங்கள்

## மக்கள் விசனம் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்லாண்டு காலமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் வாகனங்களும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வாகனங்களும் ஏ9 வீதியூடாகச் செல்லும் போது புதுமை மிக்க முறிகண்டிப் பிள்ளையார் ஆல்யத்துக்கு அருகாமையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பயணிகளும் வாகன சாரதிகள் ஆகியோரும் விநாயகரை பயபக்தியுடன் வழிபட்டுச் செல்வது காலங் காலமாக வழமையாக இருந்து வந்தது.

ஆனால் இன்று அந்த வழமை மாறி நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான வாகனங்கள் அவ்விடத்தில் நிறுத்தாமல் செல்கின்றன.

இங்கு சகல மத மக்களாலும் முன்னர் இந்த பக்தியான நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

இதனை மீண்டும் கட்டாயமாக நடைமுறைப்படுத்த சகல இந்து அமைப்புக்களும் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்நாட்களில் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் நிறுத்தப்படாது செல்லுமிடத்து பயணத்தில் இடையூறு உள்ளானதையும் எமது மூதாதையர்களும் கூறினார்கள். நாமும் அறிவோம் என்று கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் செல்லும் பயணிகளும் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (2)

# முன்னாள் புலி உறுப்பினரின் உறவுகளுக்கான தென்னிலங்கை நல்லிணக்க சுற்றுலா

(கொழும்பு)

நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் யாழ்ப்பாண படைத்தலைமையலுவலகம் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 23 பேரின் உறவினர்களை தென்னிலங்கைக்கு அழைத்துச் சென்று இடங்களைக் காண்பித்துள்ளது.

இவர்கள் வெலிக்கட, சேனபுர, ரத்மலானை மற்றும் பூஸா ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துசிங்கவின் பணிப்பின் பேரில் இந்த உறவினர்கள் கொடிகாமம் மற்றும் இராமாவில் நலன்புரி முகாம்களில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த விஜயத்தின் போது குறித்த உறவினர்கள், கிழக்கிலும் தெற்கிலும் உள்ள உறவினர்களை சந்தித்ததுடன் புனர்வாழ்வு முகாம்களில் உள்ள தமது பிள்ளைகளையும் சந்தித்தனர். (2-6)

# தபால் மூல வாக்களிப்பிற்கான பலரின் விண்ணப்பங்கள் மன்னாரில் நிராகரிப்பு

(கொழும்பு)

மன்னாரில் தபால்மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களில் பலரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டிருப்பதாக வாக்களிப்பு தினத்திலேயே அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு கடந்த 25 மற்றும்26 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று முடிந்திருக்கும் நிலையில் மன்னாரில் ஒரு சில அரச அலுவலகங்களில் தபால்மூல வாக்களிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரிலுள்ள சுமார் முப்பது அரச திணைக்களங்கள் தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருந்த நிலையில் அவற்றில் முழு அளவிலான வாக்களிப்புக்கள் இடம் பெற்றிருக்கின்ற போதும் ஒரு சில அலுவலகங்களிற்கு தபால்மூல வாக்குகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை எனத் தெரிகிறது.

ஆயினும் அவ்வாக்குகளுக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பதற்கான கடிதங்களே அவர்களுக்கு கிடைத்ததாக தபால் மூல வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மன்னாரின் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மாந்தை மேற்கு பிரதேச சபை அலுவலகம் மற்றும் மடு வலயக் கல்வி அலுவலகம் சார்பாக விண்ணப்பிக்கப்பட்ட வாக்குகளே இவ்வாறு நிராகரிக்கப்பட்டிருப்பதாக தேர்தல் தினத்தில் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

மாந்தை மேற்கு பிரதேச சபை அலுவலகத்தின் 19 வாக்குகளும் மடு வலயக் கல்வி அலுவலகத்தின் சுமார் 100 இற்கும் மேற்பட்ட வாக்குகளும் இவ்வாறு நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆயினும் இவற்றில் மாந்தை மேற்கு பிரதேச சபை அலுவலகம் சார்பாக கடந்த மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னரே தபால் மூல வாக்குகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மாத்தளை மாவட்டத்தைச் சோந்த 39 வாக்காளர்களினதும் அம்பாறை மாவட்டத்திற்கான 13 வாக்காளர்களினதும் வாக்குகளும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இதுஇவ்வாறிருக்க தபால்மூல வாக்களிப்பு தினங்களில் பவ்ரல் அமைப்பும், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமும் அவர்களது தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# பொன்சேகாவின் உடல்நிலை பாதிப்பு என்ற செய்திகளில் உண்மையில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதென வெளியான செய்திகளில் உண்மையில்லை என இராணுவம் அறிவித்துள்ளது.

பொன்சேகாவுக்கு 24 மணிநேரமும் சிகிச்சை வழங்கக் கூடிய வகையில் கடற்படை மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள கருத்துக்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிகிச்சை வழங்கும் நோக்கில் நியமிக் கப்பட்டுள்ள மருத்துவர்கள், அவர் உடல் நிலை பாதிப்பினால் அல்லலுறுவதாக தெரிவிக்கவில்லை எனவும் குறுகிய அரசியல் இலாபங்களை ஈட்டிக்கொள்ளும் நோக்கில் போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# வட்டுக்கோட்டை சங்கர

# பத்திரகாளி அம்பாள் சமேத

# தேர்த்திருவிழா சிறப்பு

## ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி



இலங்கையில் உள்ள புகழ் பெற்ற அம்பாள் ஆலயங்களில் யாழ். குடாநாட்டில் வலி. மேற்கு பிரதேசத்தில் அழகிய சிற்றூர் சங்கரத்தைப் பகுதியில் நெல்வயல்கள் புடைசூழ பத்திரகாளி சமேதராக வீரபத்திரசுவாமி சமேதராக வீற்றிருந்து அருள் பாலிக்கும் எம் அன்னையின் அருள் எங்கும் பொலி வதாக! நாட்டில் ஏற்பட்டுள்ள இன்னல்கள் நீங்கி அமைதியும் சாந்தியும் சுபீட்சமும் ஏற்படப் பிரார்த் திப்போமாக.

*ஓம் சாந்தி*

ஆறுமுகம் சிவகெங்காதர குருக்கள் (ராதா ஐயா)
ஆலய பிரதம குரு,
சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்.


## மகோற்சவ பிரதமகுருவின் ஆசிச்செய்தி



யாழ் குடாநாட்டில் வட்டுக் கோட்டை சங்கரத்தைப் பிட்டியம் பதியிலே வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டியவற்றை வாரி வழங்கிக் கொண்டு அருளாட்சி புரியும் பத்திரகாளி சமேத வீரபத்திரபெருமான் இரதமேறிபவனி வரும் இரதோற்சவத்தினம் இன்றாகும். இந் நன்நாளிலே உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழ் மக்களும் இந்த ஊர் மக்களும் நர்ட்டு மக்களும் அனைத்து ஜீவராசிகளும் சகல நலன்களும்பெற்றுசீரும்சிறப்புடனும்வாழ அன்னையின் அருள் கிடைக்க வேண்டுமெனவும் பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றேன்.

*ஓம் சாந்தி*

சிவானந்தம் நிரஞ்சன் குருக்கள்(நிரஞ்சன் ஐயா)
மகோற்சவ பிரதம குரு ,
சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்.



## நற்சங்கரத்தைப் பத்திரகாளி அன்னையே

தக்கன் செய் மமதைவேள்விதனை
தகர்த்தருளிய தேவி
திக்கெட்டும் புகழ்பெற்றிடவே
திறனாய் அருள் புரியும் தேவி
பக்தியாய் தம் பதம் பணிவோர்க்கு
பல செல்வம் நல்கும் தேவி
சக்தி ஸ்தலங்களில் ஒன்றாய் மிளிரும்
நற் சங்கரத்தை பத்திரகாளி
அன்னையே
நெல்வயல் சூழ் நற்சங்கரத்தையில்
நின்றருள் புரியும் தேவி
பல்லவர் கால நற்கலை மிளிர் கோபுரத்துள்
பாங்காய் உறையும்
கல்மனம் உருகிக் கசிந்து வழிபடுவோர்
கவலைகள் நீக்கி அருளும் தேவி
கல்வி செல்வம் வீரமொடு நற்கலைகளும்
நற்சங்கரத்தைப் பத்திரகாளி அன்னையே

சங்கரத்தையூர்– சி.சபாநாதன்.

## வடம் பிடிப்போம் வரம் பெறுவோம்!

தேரேறி வரும் சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரப் பெருமானின் அருட்கடாட்சம் அடி யார்களுக்குக் கிட்டட்டும்! துன்பங்கள் தீரட்டும்; இன்பங்கள் மலரட்டும்; வசந்தங்கள் வாழ்வில் வீசட்டும். சோதனைகள் தீரட்டும்; புது சாதனைகள் படைக்கட்டும்! அல்லல் அகலட்டும்; அவலங்கள் தீரட்டும்; அவலவாழ்வு மறையட்டும்; வாழ்வில் ஒளி வீசட்டும்; நல்வாழ்வு பிறக்கட்டும்! நிரந்தர அமைதி நிலைக்கட்டும்!

பிட்டியம்பதியாள் தேரேறி வரும் இந்நன்நாளில் அடி யார் கள் அலைகடலெனத் திரண்டு வந்து அம்பாளின் அருட் கடாட்சத்தைப் பெறுமாறு வாழ்த்துகின்றோம்; வணங்குகின் றோம் வட்டு .இந்து வாலிபர் நாம்... **செந்தமிழோடுயர் சைவ மும். சமூகமும் வாழ ஜெகமதில் உழைத்திடுவோம்.**

இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

## வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரக

யாழ்ப்பாணத்தின் வலிமேற்குப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் அழகிய சிற்றூர் சங்கரத்தை. அவ்வூரின் மேற்குப் பகுதியில் நெல் வயல்களால் சூழப்பட்ட பிட்டியம்பதி என்னும் புண்ணிய தலத்திலே பத்திரகாளி அம்மை வீரபத்திர சமேதராக கோயில் கொண்டு அடியார்களுக்கு அருள்பாலித்த வண்ணம் இருக்கிறார். பிட்டியம்பதி என்னும் இடம் பூர்வத்தில் இருமருந்துய்ய முதலியார் பரம்பரையில் வந்த பெருமையானாரின் குமாரர் முதன்மையினார் என்பவருக்குரிய தாயிருந்தது. அவ்விடத்தில் உண்டாகி இருந்த புளியமரத்தில் அமர்ந்திருந்த கிளிகள் அயலிலுள்ள நெல்வயல்களில் வேளாண்மைக் காலத்தில் வேளாண்மையை சேதப்படுத்துவதைக் கண்ணுற்ற முன்மையினார். அக்காலத்தில் (1698) வட்டுக்கோட்டை கிறிஸ்தவ தேவாலய அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த தக்சுத் தொழிலாளியை அழைத்து அப்புளியமரத்தை தறிக்கும் படி ஏவினார். அதற்கு அவன் மறுப்புத் தெரிவிக்கவே தாமே அதனைச் செய்ய முனைந்தார். அப்போது அம்மரத்தின் அடிப்புற்றுக்குள் இருந்து வெளிப்பட்ட நாகசர்ப்பம் அவரை துரத்திச் சென்றது. சிறுதூரம் சென்றதும் பாம்பு தலை தூக்கி ஆடி நிற்பதைக் கண்ட அவர் தம் தவறைப் பொறுத்தருளும் படி தம்முட் பிரார்த்தித்து தமது இருப்பிடத்திற்குச் சென்றார். அன்றிரவே அம்மையார் முதன்மையினரின் சொப்பனத்திலே தோன்றி தமக்கு நிழல் அமைத்து வழிபடுமாறு பணித்தார். அடுத்த நாளே அவ்விடத்தில் நிழல் அமைத்து வழிபடத் தொடங்கினார். அம்மரமே இன்றும் தலவிருட்சமாக வியாபித்து நிற்கின்றது. அவரின் வழித்தோன்றல்களே அன்றில் இருந்து இன்று வரை பூசகர்களாகவும் அறங்காவலர்களாகவும் இருந்து வருகின்றனர். இதுகர்ண பாரம்பரியமான கதை.

பிட்டியம்பதியில் கோயில் கொண்டமையினால் பிட்டியம்பதி பத்திரகாளியம்மை என்ற நாமம் அம்பாளுக்கு ஏற்பட்டது.முதலில் புளியம் மரத்தடியில் கதிரை ஒன்றை வைத்து அதனை வீரபத்திரக் கடவுளுக்குரிய ஆசனமாக மனத்தின் கண் நினைத்து வழிபட்டு வந்தனர். அம்பாளின் அற்புதங்களால் கவரப்பட்டு அயற்கிராமங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து வழிபடத் தொடங்கினார்கள். இங்கே திராவிட முறைப்படி பூசைகள் நடைபெற்று வந்ததுடன் பொங்கி மடையில் உயிர்ப்பலி கொடுத்தல் போன்ற வைபவங்களும் நடைபெற்று வந்தன.

சிறுகுடில் அமைத்து வழிபடத் தொடங்கிய இவ்வாலயம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்
தெய்வங்களு
மூலஸ்தானத்
சேர்ந்தவை. 19
11 ஆவது நா
அடுத்த நாள் தி
விக்கிரகங்கள
அப்போதைய
அமைக்கப்பட்
1947 ஆ
சேர்ந்து உயி
பிரதிஸ்டை செ
அங்கமாக
கொடுக்கப்ப
...க்கப்ப
கோவிலுக்குக்
விதிகளிற்கு அ
1978 ஆ
நடைபெற்று
1989 ஆம் ஆ
ஆம் ஆண்டு
நடைபெற்று
நிர்மாணம் செ
இராஜகோபுர
3 தள மகாரா
தள இராஜகோ
2008 ஆ
வயல்வெளி
நடைபெற்ற
வரலாற்றுப்பதி

*மலரமைப்பு*
*வி. கோபிகிருஸ்ணா*


32 வருடங்களாக வடமாகாணத்திலேயே யாழ். மண்ணிலே மக்களின் நன்மதிப்பைப் பெற்று திகழ்கின்ற இந்நிறுவனம் சில்வஸ்ரர் 2006, 2007. 2008,2009 ஆம் ஆண்டுகளில் வடமாகாணத்தில் சிறந்த உற்பத்தியாளருக்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றுக்கொண்ட நாயகி தயாரிப்புகளான மிக்சர், பகோடா, தட்டைவடை, முறுக்கு, கச்சான் அல்வா, எள்ளுருண்டை, இனிப்பு வகைகள் என தயாரித்து வழங்கி வருகின்றார்கள். எமது தயாரிப்புகளை விநியோகம் செய்யும் வர்த்தக பெருமக்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு உங்கள் ஆதரவைத் தொடர்ந்து வேண்டி நிற்கின்றோம்.

Note:- யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து கோப்சிற்றிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**நாயகி தயாரிப்புக்கள்**

உரிமையாளர்: சு.நிமலேந்திரன்
வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை.

**கஜமுகன் ஹாட்வெயார்ஸ்**
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2833, 222 7182

லொறி, கார், பஸ், ஆட்டோ, மோட்டார் சைக்கிள், சேவிஸ் செய்து கொடுக்கப்படும். எஞ்சின் ஒயில், கியர் ஒயில், பனற் ஒயில் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். எந்த வீதி ஊடாகவும் வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கு வரலாம்.
**P.S.சேர்விஸ் ஸ்ரேசன்**
257/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9247

**SKY Line Information Technology Centre**
Govt. Regd.No: VW/FIN/R/I/01/2008
Ponnalai Road, Sithankerney-Jaffna
www.skylineitc.com
skyline. itc@gmail.com 0215100235, 0779527575
Digital Media Technology
Computer Sales & Services
Computer Printing & Scanning
S.Sasikaran MCSE (Netsp)
Director sasi@yours.com

உங்கள் நன்மதிப்புப் பெற்
வகைகள், விவசாய உ
மொத்தமாகவும் சில்லறை
கொள்ள நாடவேண்டி
**எஸ்.பி.என்.மே**
171, ஸ்ரான
யாழ்ப்பா

பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.
**வட்டு இந்து வாலிபர் சங்க புத்தகக் களஞ்சியம்**
யாழ்ப்பாண கல்லூரி
அருகாமை, பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.


சகலவிதமான உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் என்பவற்றை சிறந்த முறையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
**பார்த்தீபன் உணவகம்**
தபாற் கந்தோர் அருகில்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை

மக்கலகரமான மற்றும் அனைத்து வைவங்களுக்குமான புகைப்பட வீடியோப் பிரதிகளை சிறந்த முறையில் பெற்றிடவும் சொக்கட்டான், வில்லுப்பந்தல்களை சிறப்பாக அமைத்திடவும் சகல வைபவங்களுக்குமான தகரப்பந்தல்கள், கதிரைகள், பாத்திரங்ள் சோடனைகள் என்பவற்றை ஒரே இடத்தில் வெற்றிட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.
**குரு போட்டோ அன் வீடியோ பந்தல் சேவை**
சங்கரத்தை, வட்டுக்கோட்டை
உரிமையாளர்–சி.குருபரன்


**பாலன் மில்**
தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்தது), சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும். அத்துடன் பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட பைக்கற்றில் அடைக்கப்பட்ட தரமான அரிசி வகைகளை மொத்தமாக பெற்றிட நாடவேண்டிய ஒரேயிடம்.
பாலன் மில்
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை
தொ.பே: 021 3212624

**Micro Tower**
**மைக்ரோ ரவர்**
**பான்சி அன் ஸ்ரேசனரி**
பாடசாலை உபகரணங்கள், அழகுசாதனைப் பொருட்கள், பிறந்தநாள் , திருமண, கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்கள், அன்பளிப்புப் பொருட்கள், பாதணி வகைகள்அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
தொ.பே: 077 6152065

# கரத்தை பிட்டியம்பதி
# தை வீரபத்திர சுவாமி ஆலய
# பு மலர் – 29.03.2010



## செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



அருள் நிறைந்த அற்புதத் திருத்தலம் சங்கரத்தை பத்திர காளி அம்மன் ஆலயம் என்றால் மிகையாகாது. பலவூர் மக்களும் பக்தியோடு விரதம் அனுஷ்டித்து வடம் பிடித்துத் தேர் இழுக்கும் வள மான திருக்கோயில் வயல் சூழ்ந்த வீதியில் வாழ்வளிக்கும் அன்னையை பக்தியோடு பக்தர்கள் இரதம் ஏற்றி வரும் நாளின் சிறப்பு வர் ணிக்க இயலாது. எத்துயரையும் விரட்டும் மாபெரும் சக்தி சங்கரத்தை அம்பாளின் திருவருள் என்பதை சகலரும் அறிவர். எனவே அம்பாள் தேரறி வரும் நாளில் சஞ்சலம் தீர்க்கும் சங்கரத்தையை நாடி அனைவரும் வாருங்கள்!! அருள் மழையில் நனைந்து நலம் பெறுங்கள் .அம்பாளின் திருவ ருளை நிறைவாகப் பெற்று அனைவரும் மண்ணில் நல்லவண்ணம் மாண்புடன் வாழப் பிரார்த்தித்து அமைகிறேன். அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்.

ஆறு. திருமுருகன்
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம் சிவபூமி
அறக்கட்டளை

## தேரேறி வந்து எம்துன்பத்தின் வேரறு தாயே!



பழமைமிகு சங்கரத்தைக் கிராமத்தில் ஆதியில் இருந்தே அருள்பாலித்து அற் புதங்கள் பல நிகழ்த்தி மக்களின் மனத் திலே ஆச்சி என நெஞ்சம் நிறைந்து நிற்ப வள் காளித்தாய். உலகம், உயிர் ,இறை வன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவி யுள்ள ஆற்றலே பராசக்தியாகும். தேரேறி அம்பாள் வீதி உலாவரும் திருக்காட்சி காண இன்று பிற ஊர்களில் இருந்து மட்டு மல்ல பிற நாடுகளில் இருந்தும் பக்தர்கள் ஆலையெனத் திரண்டு வருவதும் இந் நன்நாளில் ஆகும்.

துன்பமும் துயரமும் வாழ்க்கையில் கோலங்களாகக் கொண்ட எம்மக்கள் தமக்கு விடிவு வராதா என ஏங்கித்தவித்து நிற்கையில் பத்திரகாளி தேரேறி வருகிறாள் எங்கள் துன்பத் தின் வேரறுக்க. ஒரு கட்டத்திற்கு அப்பால் மனிதனால் எதுவுமே செய்ய முடிவதில்லை. விஞ்ஞானத்தின் இறுதிமெய்ஞ்ஞானமே என முன்னோர் கூறிய உண்மை இன்று நிதர்சனமாகிறது. அம்பாளின் வடம் பிடிப்போம் எமது வலியெலாம் துடைத்தெறி வாள் அவள். அவளே உலகின் இயக்கம், எல்லாம் வல்ல அவள் எங்கும் எதிலும் நிறைந்தவள், அவளின்றி ஓரணுவும் அசை யாது இந்த உண்மையைப் பூரணமாக உணர்ந்து சக்தித்தா யிடம் சரணடைவோம். காத்திடு தாயே எம்மை.

அ.குமாரவேல்
விரிவுரையாளர் , பட்டப்படிப்புக்கள் பிரிவு,
யாழ்ப்பாணக்கல்லூரி.

## ந்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி ஆலய வரலாறு

பகுதியில் கர்ப்பக்கிரகமும் பிள்ளையார், வைரவர் என்னும் பரிவாரத் ய்வங்களுக்கும் மண்டபங்கள் அமைக்கப்பெற்று கற்கோயிலாக மாறியது. லஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள விக்கிரங்கள் அக்காலத்தைச் ர்ந்தவை. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கொடியேற்றத்துடன் தொடங்கி ஆவது நாளான பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் தேர்த்திருவிழாவும் டுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று வருகின்றது. இன்று எழுந்தருளி க்கிரகங்களாக உள்ள அம்மையப்பர் விக்கிரகங்கள் 1880 ஆம் ஆண்டு ப்போதைய ஆலய அறங்காவலரான வீரபத்திரர் கதிரவேல் என்பவரினால் மைக்கப்பட்டன.

1947 ஆம் ஆண்டு ஆலய அறங்காவலர்களும் ஊர்மக்களில் சிலருமாக ர்ந்து உயிர்ப்பலி கொடுப்பதை நிறுத்தினார்கள். இதே ஆண்டு நந்திதேவர் திஸ்டை செய்யப்பட்டார் .உயிர்ப்பலி கொடுப்பது திராவிட பூசை முறையில் ஓர் ங்கமாக விளங்கியதால் இன்றும் பூசைகள் நடைபெறும் போது பலி ாடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் யாவற்றிலும் நீத்துக்காய் வெட்டி பலி டுக்கப்படுகின்றது. ஆனாலும் இன்றும் பக்தர்கள் தமது நேர்த்திக்காக சேவல்களையும், கடாக்களையும் விலுக்குக் காணிக்கையாக செலுத்துவதை வழமையாக்கி கொண்டுள்ளனர். இவ்வாண்டிலேயே கோவில் ஆகம களிற்கு அமைவாக அமைக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு சித்திரத்தேர்கள் செய்து வெள்ளோட்டம் நடைபெற்றது. 1985 ஆம் ஆண்டு திருத்த வேலைகள் டபெற்று வைகாசி புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1988 ஆம் ஆண்டு நவக்கிரக மண்டபமும் 9 ஆம் ஆண்டு சண்டேஸ்வர மண்டபமும் அமைக்கப்பட்டன. 1987 ஆம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுரமும் 1995 ஆண்டு வீரபத்திர மண்டபமும் திருத்தி அமைக்கப்பட்டன. 2001 ஆம் ஆண்டு புனருத்தாரண வேலைகள் டபெற்று ஆவணி ரோகினி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2002 ஆம் ஆண்டு வசந்த மண்டபம் மீள ாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2003 ஆம் ஆண்டு மாசி மாதம் தெற்குப் புறத்தில் மூன்றுதள ஜகோபுரமும் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2007 ஆம் ஆண்டு சித்திரை மாதம் கிழக்குப் புறத்தில் ள மகாராஜ கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது அம்பாளிற்கு மேற்குப் புறத்தில் 3 இராஜகோபுரம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

2008 ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டில் திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது ஆலய வெளி வீதியான ல்வெளி வீதிகளில் வெள்ளம் நிறைந்திருந்த வேளையில் அம்பாளின் சப்பறம், இரதோற்சவம் என்பன சிறப்பாக டபெற்றமை அடியார்களை மெய்சிலிர்க்க வைத்ததோடு அம்பாளின் ஆலய அற்புதங்களில் ஒன்றாக ாற்றுப்பதிவாக அமைந்து காணப்படுகின்றது.

**ஆலய அறங்காவலர்.**

## அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

பயிர் செறிந்த பிட்டியம்பதியிலே கோயில் கொண்டு வேண்டுவார்க்கு வேண்டுவதை ஈந்து அருள்பாலித்து வரும் பத்திரகாளி அன்னை இன்று தேரில் பவனி வரவுள்ளார். இந்த நன்னாளில் இவ்வூர் மக்களும் நாட்டு மக்களும் உல கெங்கும் வாழும் எம் உறவுகள் அனைவரும் எல்லாம் பெற வும் சாந்தியும் சமாதானமும் நிலவவும் அம்மை, அப்பனின் அருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

இந்து வாலிபர் சங்கம்
சங்கரத்தை.

இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 3096 Fax: 021 222 4394
E-Mail:espn.if@ hotmail.com

சகல வகையான பலசரக்குப் பொருட்கள், கட்டப் பொருட்கள், பால்மா வகைகள், கால்நடைத் தீவனங்கள், அபிஷேகப் பொருட்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
அம்பாள் ஸ்ரோர்ஸ்
(பேபி கடை)
அற்கின்சன் வீதி, வட்டுக்கோட்டை

றுப் பெற்ற *Scooty pep*
சாய உபகரணங்கள்
ல்லறையாகவும் பெற்றுக்
வேண்டிய நிறுவனம்
மோட்டோர்ஸ்
, ஸ்ரான்லி வீதி,
ாழ்ப்பாணம்.

"LANKKEN DRIVE" TRAVELS
Jaffna Colombo
All Ceylon Tour
Local Hire
A/C & Non A/C Van Hire
Vaddu South,
Vaddukoddai
Jaffna
T.P.No.: 077 9123670
021 3216350
A/C & Non A/C
'GO THE QUALITY WAY'

விமலா களஞ்சியம்
VIMALA STORES
சகல வகையான பலசரக்கு பொருட்கள், பால்மா வகைகள், கால்நடை தீவனங்கள், அபிஷேகப் பொருட்கள், தொலைபேசி அட்டைகள் (KitCard) என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
விமலா களஞ்சியம்
6, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி

ஸ்ரீ ராஜ் ரவல்ஸ்
யாழ். கொழும்பு சொகுசு ஆசனப் பதிவுகளுக்கும் அகில இலங்கை சுற்றுலா வாகன வசதிகளுக்கும், உள்ளூர் வாகன வசதிகளுக்கும் குறைந்த நாடுகள் கட்டணத்தில் நீங்கள் பிரயாணம் செய்திட யாழ். மண்ணில் தரமான சேவையினை வழங்குகின்றார்கள்.
தொடர்பு:- இ.ஸ்ரீதாமோதரராஜ்(ஸ்ரீராஜ்)
அகில இலங்கை சமாதான நீதவான்
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை.

மங்கல வைபங்களிற்கான சொக் கட்டான் வில்லுப்பந்தல்களையும், பந் தல், கதிரைகள், வைபவங்களுக்கான ஒளியமைப்புகளைப் பெற்றிடவும் நீங்கள் நாடவேண்டிய இடம்.
சுதா பந்தல் சேவை
காளி கோவிலடி தெற்கு,
வட்டுக்கோட்டை.
உரிமையாளர்-எஸ்.சுதாகரன்

வீடியோ கசற், சீடி, டி.வி.டி. போன்றவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும் தரமான வீடியோ, ஓடியோ ரெக்கோடிங்குகளை குறித்த நேரத்தில் உடனுக்குடன் செய்து பெற்றுக் கொள்ளவும் கேபிள்லைன் தொலைக்காட்சியை சிறந்த முறையில் பெற்று பார்வையிடவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
ஈசன் வீடியோ அன் ஓடியோ சென்ரர்
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை
(அடைக்கலம் கந்தசாமி ஆலயப் பின்புறம்)

நீங்கள் விரும்பிய முறையில் சிகை அலங்காரம் செய்திட நாடவேண் டிய ஒரே இடம்
ரூபன் சிகையலங்கார நிலையம்
யாழ்ப்பாணக்கல்லூரி அருகாமையில்
வட்டுக்கோட்டை.

புதிய சாந்தி அரைக்கும் ஆலை
நல்லமுறையில் நெல் உடைத்து தீட்டியும் மாவாகவும் மிளகாய்த்தூள், சீயாக்காய்த் தூள் ஈர அரிசியை மாவாகவும் உழுந்து, பயறு போன்ற வற்றை சிறந்த முறையில் குறுகிய நேரத்தில் அரைத்து மாவாகப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
புதிய சாந்தி அரைக்கும் ஆலை
சங்கரத்தைச் சந்தி அருகாமை
பிரதான வீதி, வட்டுக்கோட்டை

தரமான முறையில் வெதுப்பக உற்பத்திகளான பாண், இனிப்பு பாண், கேக், பணிஸ், பிஸ்கட் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிடவும் குறித்த நேரத்தில் கேக்வகைகள் பேக் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
சிறிமுருகன் வெதுப்பகம்
உரிமையாளர்: தி.சுரேஸ்
(துனைவிசந்தி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை)

# ஜேர்மன் தூதுவர்- இந்துமத அலுவல்கள் விவகார இணைப்பாளர் சந்திப்பு

அண்மையில் இலங்கைக்கான ஜேர்மனிய தூதர் JENS PLOTNER அவர்களுடன் ஜனாதிபதியின் இந்து மத அலுவல்கள் விவகார இணைப்பாளர்கள், சர்வதேச இந்துமத பீடத்தின் அமைப்பாளர்கள் ஆகியோர் கொழும்பில் உள்ள ஜேர்மனிய தூதரக அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரம் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் போது இலங்கையில் இருந்து சென்று ஜேர்மனியில் வாழும் இந்துக்கள், இந்து ஆலயங்கள் பற்றியும் மதப்பிரசாரத்தின் மூலம் ஜேர்மனியில் வாழும் இந்து வாழ் மக்களின் கலை ,கலாசாரம் பற்றிய தகவல்கள் பரிமாற்றமும். மேலும் இலங்கையில் இந்துமக்களின் குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களின் மேம்பாடு பற்றியும் ஜேர்மனியில் வாழும் தமிழ் மக்கள் இலங்கையை வந்து பார்ப்பதற்கான ஊக்குவிப்பும் அவர்களை இலங்கையில் முதலீடு செய்யும் எண்ணத்தை வளர்த்தலும் என்பன பற்றி ஆராயப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலின் போது இணைப்பாளர்களின் கருத்தை நான் வரவேற்பதாகவும் தான் யாழ்ப்பாண, கிழக்கு,மலைநாடு போன்ற இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்ததாகவும் தமிழ் மக்களுடன் கலந்துரையாடியதாகவும் பல்வேறு பட்ட தேவைகளை அவர்கள் எதிர் பார்ப்பதாகவும் தன்னால் இயன்ற அளவு ஜேர்மனிய அரசின் மூலம் நல்ல திட்டங்களை செயல்படுத்த விரும்புவதாகவும் ஜனாதிபதியின் இந்துமத அலுவல்கள் விவகார இணைப்பாளர்களிடம் தூதர் தெரிவித்தார். (2-6)

# பிரகீத் எக்னலிகொட தொடர்பான விசாரணை விபரங்களை இலங்கை வெளியிட வேண்டும்

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் விபரங்களை வெளியிட இலங்கை ஜனாதிபதி உத்தரவிடவேண்டுமென எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கை அரசை விமர்சித்த ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல்போய் இருமாதங்கள் கடந்துள்ளன. எனினும் அவரைக் கண்டறிவதற்கு பொலிஸார் அதிக அக்கறை காண்பிக்கவில்லை.அரசதரப்பு அமைச்சர்கள் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர் . எக்னலிகொட தானாகவே காணாமல் போயுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே அவருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தகுந்த ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளது. (2-6)

# சாராவை விடுவிக்குமாறு பஹ்ரேனின் மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை

## மதமாற்றம் தவறானதல்ல

(கொழும்பு)

பௌத்தத்திலிருந்து இஸ்லாமுக்கு மாறி பௌத்தத்துக்கு எதிராக நூல்கள் எழுதினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கைப் பெண்ணை விடுவிக்குமாறு பஹ்ரேன் நாட்டு மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக கல்ப்டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சரா மலனி பெரேரா என்ற சிங்களப் பெண் தனது இளவயது முதல் பஹ்ரேனில் வசித்து வந்தவராவார். இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட சாரா, தான் அந்த மதத்தை நேசிப்பதற்கான காரணத்தை விளக்கியும் மதங்களை ஒப்பிட்டும் இருநூல்கள் எழுதியுள்ளார்.

இந்நிலையில் விடுமுறைக்காக இலங்கை வந்தபோது அவர் கைது செய்யப்பட்டதாக பி.பி.சி.செய்திச் சேவை தெரிவித்தது.

சராவை விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பஹ்ரேன் மனித உரிமைகள் சங்கத்தின் செயலாளர் நாயகம் டாக்டர் அப்துல்லா அல் டீரசி தெரிவித் துள்ளார்.

சாரா மலனி பெரேரா அவரது சொந்த விருப்பின் பேரிலேயே இஸ்லாம் மதத்துக்கு மாறியுள்ளார். அவரை யாரும் பலவந்தப்படுத்தவில்லை. அவர் எழுதிய நூல்களில் பௌத்த மதத்துக்கு எதிரான கருத்துக்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

இலங்கை அதிகாரிகள் அவரை விடுதலை செய்து பஹ்ரேனுக்கு அனுப்ப வேண்டும். பஹ்ரேனில் அவர் நீண்டகாலம் வசித்தார். அவருக்கு இது சொந்த நாட்டைப் போன்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1999 ஆம்ஆண்டு சாரா இஸ்லாம் மதத்துக்கு மாறினார். அவரைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினரும் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டதாக பஹ்ரேனில் கல்ப் டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இருளிலிருந்து வெளிச்சத்துக்கு என்ற நூலும் கௌதமபுத்தரின் உண்மையான போதனைகள் மற்றும் கேள்வி -பதில் அடங்கியதாக மற்றுமொரு நூலினையும் அவர் வெளியிட்டுள்ளார். அவற்றை இலங்கையிலிருந்து பஹ்ரேனுக்கு அனுப்புவதற் கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, பஹ்ரேனின் பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும் சாராவுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(2-6)

# வர்த்தக கண்காட்சி -2010 இன் கலை, கலாசார நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சியின் மாலை வேளை கலை, கலாசர நிகழ்ச்சிகளில் இன்று இடம்பெறவுள்ள கலை நிகழ்வுகளில் மாலை 6.30 மணியளவில் நல்லூர் பாலமுருகன் குழுவினரின் தவில், நாதஸ்வர கச்சேரியும் தொடர்ந்து இரவு 8 மணிக்கு உரும்பிராய் கலைக்கோயில் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரின் மாணவிகள் வழங் கும் நாட்டியாஞ்சலி நிகழ்வும் இரவு 9 மணிக்கு நாச்சியார் கோவிலடி ஜெயராமன் குழுவினரின் வயலின் இசைக் கச்சேரியும் இடம்பெறும். (2)

# அனலைதீவு மேம்பாடு கருதி அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

அனலைதீவுக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதியின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக 11 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாவை வழங்கினார்.

இதன் பிரகாரம் அனலைதீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அபிவிருத்திக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2 இலட்சம் ரூபாவும் வடலூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அபிவிருத்திக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் அமைச்சினால் வழங்கப்பட்டது.

அத்துடன் அனலைதீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு 2 இலட்சம் ரூபாவையும் அனலைதீவு லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் வளர்ச்சிக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் அமைச்சர் வழங்கினார்.இந்த நிதியுதவியைக் கொண்டு முதற் கட்டப் பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்த அவர் தேவைப்படும் மீதமான பணத்தை கட்டம் கட்டமாக வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், கடற்றொழிலாளர்கள், ' விளையாட்டு வீரர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டு தமது தேவைகள் குறித்து எடுத்துக் கூறியமையை கவனத்தில் கொண்டே மேற்படி நிதியுதவிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பின்னர் அனலைதீவு மேற்கில் அமைச்சரின் நிதியுதவியின் கீழ் புனரமைக்கப்பட்ட அருணோதயா சனசமூக நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட அவர் அப்பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாவை வழங்கினார்.

அதில் சனசமூக நிலையத்தின் முன்பள்ளி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளுக்கென 2 இலட்சம் ரூபாவும் முன்பள்ளி ஆசிரியைகளின் சம்பளத்திற்காக 18 ஆயிரம் ரூபாவும் அடங்கும். (2)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் படையினரின் சோதனை நடவடிக்கை

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணங்களில் கடந்த வெள்ளி பல்வேறு இடங்களில் பாதுகாப்பு படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நல்லூர், அடம்பன், திருகோணமலை வாழைத்தோட்டம் மற்றும் வாகரை ஆகிய பிரதேசங்களிலேயே இச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கைகளின் போது ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளது எனவும் ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (9)

# குடிநீர் விநியோக ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தின் ஏற்பாட்டில் நவாலி வடக்கிற்கு பொக்கனை ஊடான குடிநீர் விநியோக ஆரம்ப நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு ஹேமலதா ஞாபகார்த்த சிறுவர் நிதிய தலைவர் செ.ரமேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நவாலி வடக்கு வாசிகசாலை முன்றலில் ஆரம்பித்து நவாலி மகாவித்தியாலய மண்டதம் வரை நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2)







தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி ஆங்கிலநெறி ஆரம்ப வைபவத்தில் கல்வி மானி அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி நிகால் விக்கிரமசிங்க கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் ஆகியோர் மாணவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டு, நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் கல்விமாணி, ஆங்கிலநெறி முதலாம் அணி மாணவர்கள் மற்றும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் தற்போதைய பாராளுமன்றத் தேர்தல் முறை

## ஓர் கண்ணோட்டம்



தற்பொழுது இலங்கையில் நடைபெறும் தேர்தல் எப்படி நடைபெறுகின்றது என்பது பற்றி பெரும்பான்மையான வாக்காளர்களும் , மக்களும் விளங்கிக்கொள்ள கடினமாகவுள்ளது. தேர்தல் முறை, அது பற்றிய அடிப்படை அறிவு, செயற்பாடுகள் பற்றிய தெளிவின்மையை பூரணமாக விளங்கிக் கொள்வதற்காக இவ்விடயம் பற்றிய தெளிவான விளக்கம் அளிக்கப்படுகின்றது.

இன்று இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் ,பாராளுமன்றத்தேர்தல் ,மாகாணசபைத் தேர்தல் ,உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்ற நான்கு வகைத் தேர்தல் நடைபெறுகின்றன. இவற்றுள் பாராளுமன்றத் தேர்தல் இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் இருந்து நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறப் போகும் பாராளுமன்றத்தேர்தல் 14ஆவது தேர்தலாகும்.1977ஆம் ஆண்டுவரை இலங்கைப் பாராளுமன்றத்திற்கு தொகுதி வாரியாக பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. ஆனால் 1989ஆம் ஆண்டில் இருந்து புதிய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியான பாராளுமன்றத்தேர்தல் நடைபெற்று வருகின்றது.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தேர்தல் நடைபெற்ற ஆண்டு, வாக்காளர் தொகை, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் தொகை என்பன காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | வாக்காளர் தொகை | தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் தொகை |
|---|---|---|
| 1947 | 1887364 | 95 |
| 1952 | 2327626 | 95 |
| 1956 | 2391538 | 95 |
| 1960-மார்ச் | 2889282 | 151 |
| 1960-யூலை | 2889282 | 151 |
| 1965 | 3821918 | 151 |
| 1970 | 4991798 | 151 |
| 1977 | 6243573 | 168 |

விகிதாசார தேர்தல்முறை

| ஆண்டு | வாக்காளர் தொகை | மாவட்டம் + தேசிய =மொத்தம் |
|---|---|---|
| 1989 | - | 196 + 28 = 224 |
| 1994 | 7943706 | 196 + 29 = 225 |
| 2000 | 8818983 | 196 + 29 = 225 |
| 2001 | 8955869 | 196 + 29 = 225 |
| 2004 | - | 196 + 29 = 225 |

முதலாவது பாராளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுவது போல ஒரே நாளில் நடைபெறவில்லை. 95 தேர்தல் தொகுதிகளுக்கு 19 நாட்களிலும் 2இரண்டாவது பாராளுமன்றத்தேர்தல் நான்கு நாட்களிலும் மூன்றாவது தேர்தல் 3 நாட்களிலும் நடைபெறவுள்ளன. இதனால் முதலில் வெற்றி பெற்ற கட்சிக்கு சாதகமான நிலைமை ஏற்படுவதானால் ஒரே நாளில் நாடு முழுவதும் தேர்தல் நடைபெற வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எனவே நான்காவது பாராளுமன்றத் தேர்தல் இன்று வரை நாடு முழுவதும் ஒரேநாளில் தேர்தல்நடைபெறுகின்றது.

95 உறுப்பினர்களைக்கொண்ட முதலாவது பாராளுமன்றத்தேர்தலில் 42 உறுப்பினர்களை ஐக்கியதேசியக் கட்சியும், 19 உறுப்பினர்களை இடதுசாரி கட்சிகளும், 13 உறுப்பினர்களைதமிழ்க் கட்சிகளும் பெற்றிருந்தன.1952 ஆம் ஆண்டு பாராளு மன்றத் தேர்தலில் சிங்கள் மக்களையும்,தமிழ் மக்களையும் கவரக் கூடிய இனவாத கட்சிகள் உருவாகின. எனினும் இத்தேர்தலில் 95 உறுப்பினர்களைக் கொண்ட பாராளு மன்றத்தில் 54 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சியே பெற்றுக்கொண்டது. எனினும் பின்னர் பெரிய கட்சியாக உருவெடுத்த ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி ஒன்பது ஆசனங்களையும் தமிழரசுக் கட்சி இரண்டு ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலகுவில் மக்கள் மனதைக் கவரக்கூடிய தனிச் சிங்களம், தேசிய மயமாக்கல், பௌத்த மதவாதம் போன்ற இன, வகுப்புவாதக் கொள்கைகளைப் பரப்பி 51 ஆசனங்களையும், சமஷ்டி அமைப்பு என்ற கொள்கையை முன்வைத்து 10 ஆசனங்களை தமிழரசுக் கட்சியும் பெற்றுக்கொண்டன. இவ்விதமான இனவாத, வகுப்புவாதக்கொள்கையே இன்றும் தேர்தலின் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படுகின்றது.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 95 உறுப்பினரின் தொகை 151 ஆக அதிகரிக்கப்பட்டது. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 50 ஆசனங்களையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 46 ஆசனங்களையும் தமிழரசுக்கட்சி 15 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. இத்தேர்தலில் ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டிராததால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

பின்னர் 1960 ஆம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் கூடுதலாக இனவாதம் பேசப்பட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி 75 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 30 ஆசனங்களையும்,தமிழரசுக்கட்சி 16 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. இன வாதம் பேசாத லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூ னிசக் கட்சி என்பன அரசியலில் இருந்து மறையத் தொடங்கின.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 66 ஆசனங்களையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 41 ஆசனங்களையும் பெற்றிருந்தன.

1970 ஆண்டு பாணின் விலை, பருப்பின் விலை என்பனவற்றை அதிரடியாக குறைப்பது போன்ற வாக்குறுதிகளை வழங்கி சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றனர். இத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து 91 ஆசனங்களையும், லங்கா சமசமாஜக் கட்சி 19 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன. ஐக்கியதேசியக் கட்சி 17 ஆசனங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 151 இல் இருந்து 168 ஆக அதிகரிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் மேற்கு நாடுகளின் உதவிகள் பெறமுடியாமையால் அரசு பாரிய பொருளாதார நிதி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதனால் அரசு மக்களிடமிருந்து வரிகளை அறவிட்டதுடன் பொருட்களை நுகர்வதில் கூட பாரிய கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டியிருந்தது. இதனால் பாதிக்கப்பட்டு வெறுப்புற்ற மக்கள் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெறுத்து ஒதுக்கினர். இத்தேர்தலில் என்றுமே எதிர்பாராத விதமாக ஐக்கியதேசியக் கட்சி 140 ஆசனங்களையும் தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகள் இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் போட்டியிட்டு 18 ஆசனங்களையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெறும் 8 ஆசனங்களையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் சுயேட்சை 1 ஆசனத்தையும் பெற்றன. இத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து முக்கிய பல நிகழ்வுகள் நடை பெற்றதைகாணமுடிந்தது. 2/3 பெரும்பான்மையை (83%) ஐக்கிய தேசிய கட்சி பெற்றுக் கொண்டாலும் முன்னர் பாராளுமன்றில் அங்கம் வகித்த பல மூத்த உறுப்பினர்களும் முக்கிய மந்திரிகளும் தோல்வி கண்டனர். ஐக்கிய தேசியகட்சிக்கு இந்நிலை திரும்ப வரக்கூடாது என்ற நோக்கில் தேர்தல் முறையை மாற்றி அமைக்க ஜே. ஆர்.ஜெயவர்த்தனா முற்பட்டார்.

அத்தோடு தமிழ்க்கட்சி ஒன்று எதிர்கட்சியாக வந்தமையும் சில சிங்கள அரசியல்வாதிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே இவற்றை நிவர்த்தி செய்யும் எண்ணத்தோடு 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்கான அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. எனினும் இப் புதியமுறைப்படி நடைபெற்ற தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சியோ அன்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ தனித்து பாராளுமன்றம் அமைக்கக் கூடிய பெரும்பான்மை பெறக் கூடியதாக இருக்கமாட்டாது என்பதை உணரத் தவறிவிட்டனர்.

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்த கதையைப் போல பின்னர் தான் சிங்கள அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டனர். இவ்வாறான தேர்தல் முறை ஆட்சி அமைப்பதற்கு சிறுபான்மையினரது உதவி தேவை என்ற நிலைக்கு கொண்டு சென்றுள்ளதை இன்றைய பல சிங்கள அரசியல்வாதிகள் உணர்ந்து இதனை முடிவுக்குக் கொண்டு வர முயன்று வருகின்றனர்.

1989 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார தேர்தல் முறையில் தற்போது நடைபெறப்போவது ஆறாவது தேர்தலாகும்.

செ.மகாலிங்கம் B.A(Hons)M.A
முன்னாள் திட்டப்பணிப்பாளர்,
திட்டமிடல் பணிப்பாளர்,
யாழ்.செயலகம்.

(தொடரும்)

# ஐ.தே.க தேர்தல் பிரசார நடவடிக்கைக்கு இ.தொ.க தடை ஏற்படுத்தி வருகிறது

## யோகராஜன் குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தடை ஏற்படுத்தி வருவதாக கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

பத்தனை மேபீல்ட் தோட்டத்தில் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட தமது வாகன தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பில்அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாக்குதல் சம்பவங்களினால் வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் ஆதரவாளர்களும் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் பலனளிக்கவில்லை என்றும் காந்திய வழிகொள்கைகளை பின்பற்றுவதாக அறிவிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றது என்றார்.(2-6)

# தேர்தல் வன்முறைகள் தொடர்பில் பலர் தொடர்புபட்டுள்ளனர்

## பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இதுவரை 193 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதேவேளை இவ்வன்முறைகள் தொடர்பில் 127 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் தொடர்பான பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் வன்முறைகள் தொடர்பிலான குற்றச் சாட்டின் அடிப்படையில் பலர் தேடப்பட்டு வருவதாகவும் காமினி நவரட்ண மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# நிர்வாகத்தினர்-ஊழியர்களிடையே முறுகல்நிலை முடக்க நிலையில் திக்கம் வடிசாலை

## ஊழியர் தொழிற்சங்கத்தினர் தெரிவிப்பு




திக்கம் வடிசாலையின் ஊழியர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக மதுவரிப் பகுதியினரால் வடிசாலையின் சகல பகுதிகளுக்கும் சீல் வைக்கப்பட்டு முடக்கநிலை ஏற்பட்டுள்ளதாக வடிசாலை ஊழியர் தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஊழியர்களது வாழ்க்கைச் செலவுப் பகுதியாக தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த 2 ஆயிரத்து 875 ரூபாவும் விருப்புகளும் சலுகைகளும் 2009 யூலை மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டது தொடர்பாகவே தகராறு ஏற்பட்டு சீல் வைக்கும் நிலை ஏற்பட்டதாகவும் மேலும் இதன் காரணமாக கள் இறக்கும் தொழிலாளர்களின் கள்ளினை கொள்வனவு செய்து வடிப்பில் ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# வடக்கு-கிழக்கிற்கான பணிகளை குறைத்துள்ள சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இதுவரை காலமும் மேற்கொண்டு வந்த சேவைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய கடந்த மே மாதம் யுத்தம் நிறைவடைந்த தனைத் தொடர்ந்து அநேக மான சர்வதேச தொண்டு நிறுவனங்களின்பணிகள்குறைவடைந்துள்ளன.

எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்பட்ட காரணத்தினால் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் ஏற்கனவே நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறெனினும் தொடர்ச்சியாக இலங் கையில் இயங்கி வருவதாகவும் வடக்கு- கிழக்கு மீள் குடியேற்றப் பணிகளில் அவற்றுக்கு மிக முக்கியமான பங்கு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

யாழ். கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பருத்தித்துறை கோட்டக் கல்விப்பணிப்பளர் பா.இரகுநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் விளையாட்டுத்துறை செயலாளர் எஸ். செல்வக்குமார் நிற்பதையும், கல்லூரி அதிபர் கா.புஸ்பராசா தலைமையுரையாற்றுவதையும், போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களையும், பரிசில் வழங்கிய திட்டமிடல் பிரதிக் கல்விப் - பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

### கிராமப்புற வைத்தியசாலைகளில்

# மருத்துவ பரிசோதனை அறிக்கைகளை துரிதகதியில் வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கிராமப்புறப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கு மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள துரிதமாக வழங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்மூலம் கிராமப்புற மக்கள் தனியார் வைத்தியசாலைக்கு சென்று மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக செலவாகும் பணத்தை மீதப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் திட்டம் காரணமாக ஆதார வைத்தியசாலைகளில் காணப்படும் நோயாளர் நெரிசலை குறைத்துக்கொள்ள முடியுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்ட வைத்திய சாலைகள், ஆதார வைத்தியசாலைகள், போதனா வைத்தியசாலைகளில் மருத்துவ பரிசோதனை சேவைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான தன்னீர்ப்பு உபகரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித் தார்.

இதன் பொருட்டு மருத்துவ பரிசோதனை அதிகாரிகளை வைத்தியசாலைகளில் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டாக்டர் அஜித் மெண்டிஸ் தெரிவித் தார்.

ஒவ்வொரு வைத்தியசாலையினதும் மருத்துவ பரிசோதனை பிரிவுக்கு குறைந்த பட்சம் 8-10பேர் வரையான ஊழியர்களை நியமிக்க தீர்மானித்துள்ளதாகவும் கிராமிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களிடம் இருந்து பெறப்படும் மாதிரிகள் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் அங்கு அவை பரிசோதிக்கப்பட்டு 2 அல்லது 3 மணித்தியாலங்களில் அறிக்கைகள் தொலைநகல்கள் மூலம் உரிய வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார். (6)

# வாக்கு எண்ணும் நிலையங்களில் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு கண்காணிப்பாளர்களை அனுமதிக்க முடியும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கு கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

இதற்கமைய ஒவ்வொரு கண்காணிப்புக் குழுவில் இருந்தும் ஒருவர் வாக்கு எண்ணப்படும் நிலையங்களுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றார். (2-6)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2010




எம்.சி.சுப்பிரமணியம்

"தொற்று நோய்க்கும்
தொழு நோய்க்கும்
மருந்து கண்டோமே!
முற்றிப்போன சாதிநோய்க்கு
மருந்து கண்டோமா? -அதை
முழுவதுமாய் எரித்துச் சாம்பல்
கரைக்க வேண்டாமா?"

பி.ஜே.அன்ரனி (மாஸ்ரர்)
(சட்டத்தரணி)
முதன்மை வேட்பாளர்

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை
எங்கள் வெற்றி! உங்கள் வெற்றியே!!

சுயேட்சைக்குழு-03



(678)



கலைமகள் அழகுநிலா
அழகுக்கலை பயிற்சி நிலையம்



நான்கு நாட்கள் பயிற்சி இடம்பெற்று பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகுநிலையம் நடாத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். பயில விரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

பயிற்சிகள்

| | |
|---|---|
| Furit Facial | Pedeicure Manicure |
| Normal Facial | Hair Stariting |
| Gold Facial | Hair Perming |
| Silver Facial | Hair Dye |
| Purl Facial | Hair Colouring |
| Waxing | Hair Cut |
| Threading | Bridal Make up (4 வகை) |
| Hot Oil Massage | கறுப்பு காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும் |
| Pimple Treatment | Bleaching |

பயிற்சிக் கட்டணம் - 4000/-
பயிற்சி ஆரம்பம் - 01.04.2010
பயிற்சி நேரம் - காலை 9மணி -மாலை 4 மணி

தொடர்புகளுக்கு: 0773719071
0214908151

கலைமகள் அழகுநிலா
இல 87, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

(983)



தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம்
கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
பங்குனி உத்தர நவோத்திர
சகஸ்ர 1008 சங்காபிஷேகம்



ராகம்- கல்யாணி
ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பாங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக் கின் ஜோதியே கல்யாணி

29.03.2010 (திங்கள்) - காலை 7மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் விசேட பூசை நண்பகல் மகேஸ்வரபூசை (அன்னதானம்) நடைபெறும்.

பிற்பகல் 3.00 மணிக்கு விசேடபூசை 4.00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை 5.00 மணிக்கு பௌர்ணமித் திருவிளக்குப் பூசை, திருவூஞ்சல் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான் ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ முருகப்பெருமான் பூந்தண்டிகை யில் தெருவீதி உலாவரும் அருட்காட் சியும் இடம்பெறும்.

சங்காபிஷேகம் உபயம் - அரச ஊழியர்களும், ஓய்வூதியம் பெறுவோரும் (கோண்டாவில்)

"தில்லையம்பதியாளே சிவகாமசுந்தரியே சரணம்"

தில்லையம்பதி

இங்ஙனம்
பரிபாலனசபை.

(C-4798)

# பிரிட்டன் வாழ் ஆசிய கோடீஸ்வரர்களில் இந்தியாவின் லட்சுமி மிட்டல் முதலிடம்

(லண்டன்)

வெளிநாட்டு வாழ் இந்திய தொழிலதிபர் லட்சுமி மிட்டல் பிரிட்டனில் வாழும் ஆசிய



கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு 1.22 இலட்சம் கோடி ரூபாய்.

ஏசியன் மீடியா அண்ட் மார்க்கெட்டிங் குரூப்பின் ஈஸ்டர்ன் ஐ. என்ற பத்திரிகை ஆசிய பணக்காரர்கள் பட்டியல் 2010 ஐ லண்டனில் உள்ள சாபிடெல் ஹோட்டலில் வெளியிட்டது. அதில் வெளிநாட்டு வாழ் இந்திய தொழிலதிபரான இலட்சுமி மிட்டல் (59) பிரிட்டனில் வாழும் ஆசிய கோடீஸ்வரர்களில் முதலிடம் பிடித்துள்ளார்.

உலகின் மிகப் பெரிய ஸ்டீல் கம்பெனியான ஆர்சிலர் மிட்டல் நிறுவன உரிமையாளரான இலட்சுமி மிட்டலின் சொத்து மதிப்பு 1.22 இலட்சம் கோடி ரூபாய்.

இவரை தொடர்ந்து இந்துஜா சகோதரர்கள், வேதாந்தா சுரங்க குழுமத்தின் அனில் அகர்வால், பெஸ்ட் வேஸ் நிறுவனத்தின் சர் அன்வர் பர்வேஸ் மற்றும் கப்பாரோ நிறுவன உரிமையாளர் ஸ்வராஜ் பால் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் இந்துஜா முழுமத்தின் தலைவர் மற்றும் துணைத்தலைவரான எஸ்.பி.இந்துஜா மற்றும் ஜி. பி.இந்துஜா ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. ஆசிய பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருக்கும்:.இவர்களின் இந்துஜா பவுண்டேஷன் சார்பில் மும்பையில் பி.எச். இந்துஜா தேசிய மருத்துவமனை மற்றும் மருத்துவ ஆராய்ச்சி மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

பல்வேறு துறைகளில் முதலீடு செய்துள்ள இந்துஜா சகோதரர்கள் கூறுகையில்,

இந்தியாவின் உள்கட்டமைப்பு துறைக்காக குறைந்து 100 கோடி ரூபாய் நிதியுடன் கூடிய நிதியம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதே நோக்கம் என்றனர்.

இவர்களின் சொத்து மதிப்பு 57 ஆயிரத்து 600 கோடி ரூபாய் இப்பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருக்கும் சுவராஜ் பால், கடின உழைப்பு, ஒற்றுமை மற்றும் அதிர்ஷ்டம் ஆகியவையே தன் வெற்றிக்கு காரணம் என்றார். இவரின் சொத்து மதிப்பு 3672 கோடி ரூபாய் எனக் குறிப்பிடப்படுகிறது. (2-6)



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள கல்வி ஆராய்ச்சி மையம் ஐ:நா. சபையின் பொதுச் செயலாளர் பான்-கீ-மூனுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.




# கடற்படை கப்பல் மூழ்கி 40 வீரர்கள் மாயம்



வடகொரிய கடல் எல்லை அருகே தென்கொரிய கடற் படை கப்பல் நேற்று முன் தினம் இரவு மூழ்கியது. அதில் 58 வீரர்கள் மீட்கப் பட்டனர்.40 வீரர்களை காணாததால் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. வடகொரியாவின் தாக்குதலா என்றும் இது தொடர் பில் மேலும் தெரியவருவ தாவது,

தென்கொரியாவின் கடற் படை கப்பல் சியோனன் வட கொரியாவின் கடல் எல்லைக்கு அருகேயுள்ள பேக் னயாங் தீவுப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டி ருந்தது. இதில் 104 வீரர் கள் மற்றும் அதிகாரிகள் இருந்தனர். கப்பல் திடீரென மூழ்கியது. இத் தகவல் தெரியவந்து 5 மணி நேரம் கழித்து மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு சென்றனர். அங்கு கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 58 வீரர்களை காப்பாற்றினர். இச்சம்பவம் குறித்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் தென் கொரிய அதிபர் லீ மியூங் பக் அவசர ஆலோசனை நடத்தி வருகிறார். அமெரிக்கா மற்றும் தென் கொரியா மீது திடீர் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரத்துக்குள் தென்கொரிய கடற்படை கப்பல் மூழ்கியுள்ளதால் வடகொரியா தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது. விபத்தாக இருக்கலாம் என்றும் கருதப்படுவதால் தீவிர விசாரணை நடந்து வருகிறது. வட கொரியா, தென்கொரியா இடையே 1953 ஆம் ஆண்டு போர் நிறுத்தம் ஏற்பட்டது.

ஆனால் அதன் பிறகு இரு தரப்பு இடையே பல முறை துப்பாக்கி சூடு சம்பவங்கள் நடந்துள்ளன. வட கொரியா கடந்த ஜனவரியில் தென்கொரியா எல்லையை நோக்கி 30 பீரங்கி குண்டுகளை வீசியது. பதிலுக்கு தென்கொரியா 100 குண்டுகளை வீசியது குறிப்பிடத்தக்கது.(2-6)

# கப்பல் பணியாளர்களை விடுவிக்க தொடர்ந்து பேச்சுவார்த்தை

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 23 இலங்கை கப்பற்பணியாளர்களை விடுவிக்கும் முகமாக பேச்சுவார்த்தை இடம்பெற்றுவருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் மற்றும் சிரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இரண்டு கப்பல் பணியாளர்களும் இதன்போது கடத்தப்பட்டுள்ளனர்.

தற்போது அவர்கள் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# ஈராக்கில் கூட்டணி ஆட்சி அமைக்க முன்னாள் பிரதமர் தீவிரம்

ஈராக்கில் கடந்த 7ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. அதில் பிரதமர் மாலிகியின் ஆளும் கட்சி முன்னாள் பிரதமர் அயத் அல்லாவியின் மதசார்பற்ற கட்சி மற்றும் பிராக்கி தேசிய கூட்டணி (ஐ.என்.ஏ) உள்ளிட்டவை போட்டியிட்டன.

தேர்தல் முடிந்து 3 வாரத்துக்கு பிறகு தேர்தல் முடிவுகள் வெளியாகின. நேற்று முன் தினம் இறுதி முடிவு அறிவிக்கப்பட்டது.

இதில் முன்னாள் பிரதமர் அயத் அல்லாவியின் கட்சி 91 இடங்களை பிடித்து வெற்றி பெற்றது. பிரதமர் நூரி அல் மலிகியின் கட்சி 89 இடங்களில் வென்று 2 ஆவது இடத்தை பிடித்தது. ஈராக்கி தேசிய கூட்டணி 70 இடங்களை கைப்பற்றி 3 ஆவது இடத்தில் உள்ளது;

இந்த தேர்தலில் முன்னாள் பிரதமர் அல்லாவியின் கட்சி வெற்றி பெற்றாலும் தனித்து ஆட்சி அமைக்க கூடிய அளவில் தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை. எனவே கூட்டணி ஆட்சி தான் அமைகிறது.

இதற்கான நடவடிக்கையில் அல்லாவி இறங்கியுள்ளார். தேர்தலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள ஈராக்கி தேசிய கட்சியுடன் அவர் பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளார். இவை தவிர பல தரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்து வருகிறது. (2-6)

# பின்லேடன் நலமாக இருக்கிறார்; அமெரிக்காவில் பிடிபட்டவர் தகவல்



ஒசாமா பின்லேடன் ஆரோக்கியமாக இருப் பதாக அல் கொய்தா இயக்கத்தை சேர்ந்த ஒருவர் கூறி இருக்கிறார். அமெரிக்காவின் எப்.பி.ஐ. பொலீசார் சிகாகோ நகரில் அல் கொய்தா இயக்கத்துடன் தொடர்புள்ள ராஜா லக்ரா சிப் கான் என்ற ரக்சி டிரைவரை கைது செய்தனர். அவர் அல்கொய்தா இயக்கத்துக்காக செயல்படும் காஷ்மீரி என்பவருடன் தொடர்பு வைத்து இருந்தார். அவர்கள் 2 பேரும் பேசிய பேச்சை அமெரிக்க பொலீசார் இரகசியமாக பதிவு செய்துள்ளனர்.

அதில் பின்லேடன் உயிரோடு இருக்கி றார்? என்று கான் கேட்கிறார். அதற்கு பதில் அளித்த காஷ்மீரி பின்லேடன் ஆரோக்கியமாக இருக்கிறார். தளபதிகளுக்கு கட்டளைகள் பிறப்பிக்கிறார் என்று கூறி உள்ளார். (2-6)

# அல்கொய்தா இயக்கம் முற்றாக அழிக்கப்படும்

## அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அல்கொய்தா இயக்கம் முற்றிலும் அழிக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இரட்டை கோபுர தகர்ப்பு வழக்கில் முக்கிய குற்றவாளியான காலித் ஷேக் முகமதுவுக்கு தூக்கு தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்நிலையில் அவரை தூக்கிலிட்டால் அமெரிக்கர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்படும் என அண்மையில் பின்லேடன் எச்சரித்திருந்தார்.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ராபர்ட் கிப்ஸ் கூறுகையில், அல்கொய்தா இயக்கத்தை முற்றிலும் அழிக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் பின்லேட னின் இது போன்ற அச்சுறுத்தல்களினால் அமெரிக்கா ஒரு போதும் தன் நிலையி லிருந்து பின்வாங்காது.

அல்கொய்தா இயக்கத்தை அடியோடு அழிப்பதில் ஒபாமா தலைமையிலான அரசு உறுதியாக உள்ளது என்றார். (2-6)




பிலிப்பைன்ஸ் அதிபர் அரோயாவின் ஆட்சிக்கெதிராக மணிலாவில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# பிரான்ஸில் உயர் கல்வி பயில...

## பிரான்ஸ் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கும் முறை

(15ஆம் திகதி தொடர்ச்சி)

**பட்டப்படிப்பு**

பொதுவாக பிரான்ஸ் கல்வியாண்டு செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகிறது. எனினும் சில நிறுவனங்கள் கோடை காலம், வசந்த காலம் மற்றும் மழைக்கால சிறப்பு வகுப்புக்களை ஆரம்பிக்கின்றன.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களா நீங்கள்.

உங்களுக்கு பிரெஞ்சு மொழியில் திறமை (DELF B2 Level) உள்ளதா? நீங்கள் பிரான்ஸ் பல்லைக்கழகங்களில் கல்வி கற்பதற்கு தகுதியுடையவர்கள்.

கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரக கல்விப் பிரிவின் ''கம்பஸ் பிரான்ஸ்'' (Campus France) அலுவலகத்திற்கு நேரில் சென்று உங்களுடைய கல்வித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடி விண் ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள் ளுங்கள்.

நீங்கள் முதலில் பிரான்ஸில் மூன்று பல்கலைக்கழகங்களை தெரிவு செய்து விண்ணப்பப்படிவங்கைள பூரணப்படுத் துங்கள்.

விண்ணப்பப் படிவங்களை பிரான்ஸ் தூதரகத்தின் ஊடாக Campus France அலுவலகத்திற்கு ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

மேற்குறிப்பிட்ட ஜனவரி 31 திகதியானது அந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள புதிய கல்வி ஆண்டிற் கான விண்ணப்ப இறுதித் திகதியாகும்.

பின்னர் பெப்ரவரி மூன்றாவது வாரம் பிரெஞ்ச் மொழித்திறன் பரீட்சைக்கான (TEF / DAP Test de Connaiss ance de Franciase/ Demanded Admission Prealable) கோரிக்கை கொழும்பு பிரான்ஸ் தூதரகத்தில் விடுத்து பரீட்சைக்கு தோற்றுங் கள்.



உங்களுடைய விண்ணப்பங் களை கொழும்பு பிரான்ஸ் தூதரகம் பிரான்ஸ் பல்கலைக்கழங்க ளுக்கு அனுப்பிவைக் கும்.

இதனையடுத்து நீங்கள் தெரிவு செய்த பிரான்ஸ் பல்கலைக் கழகங்கத் தால் உங் ளுக்கு பதில் அனுப்பி வைக்கப்படும். இதில் உங்களுக்கு பல்க லைக்கழகம் பொருத்தமான ஒன் றைத் தெரிவு செய்து யூலை 15ஆம் திகதி க்கு முன் விண்ணப் பத்தை அனுப்பிவைக்கவும்.

இதனையடுத்து உங்களுடைய அனுமதி தொடர்பில் குறித்த பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும்.

(தகலல்கள் அடுத்த வாரம் வரும்)

## விமானப் பணிப்பெண்களுக்கு அதிகரிக்கும் வேலைவாய்ப்பு

விதவிதமான நாடுகளுக்குப் பயணம் செய்யவும், பல்வேறு கலாசாரங்களைச் சார்ந்த மக்களைச் சந்தித்து உரையாடும் அனுபவத்தையும் அளிக்கக்கூடிய விமானப் பணிப்பெண்களுக்கான துறையில் வேலைவாய்ப்பும் பிரகாசமாக உள்ளது. மேலும் ஊதியம் நிறைவாகக் கிடைப்பதால் இந்தப் படிப்புக்கு போட்டி அதிகமாகவே இருக்கிறது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட தகுதிகள் இருந்தால் மட்டுமே இந்தப் படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும். பிரபலமாகி வரும் இந்தப் படிப்பை அளிக்கும் கல்வி நிறுவனங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன. தற்போதைய காலகட்டத்தில் விமான சேவைகள் அதிகரித்துக்கொண்டே போவதால் இந்தத் துறையில் பயில்பவர்களுக்கு சிறப்பான வரவேற்பும் தொழில்வாய்ப்பும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

விமானப் பணிப்பெண் வேலையில் முதன்மையான அம்சம், பணிகளின் பாதுகாப்பே. அது தவிரவும் விமானத்தில் பயணம் செய்யும் போது அவர்களை வழிநடத்த வேண்டியதும் அவர்களின் முதன்மைப் பணியாகவே கருதப்படுகிறது. மொத்தத்தில் பயணிகள் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல், வசதியான பயணத்தை மேற்கொள்ளச் செய்யவேண்டியது விமானப்பணிப்பெண்களின் கடமையாகிறது.

முதலில் பயணிகளை வரவேற்று, விமானம் பற்றிய முக்கிய தகவல்களையும், அவசர காலத்தில் செய்ய வேண்டியவற்றையும் செய்முறையுடன் விபரிக்க வேண்டும். பயணிகளுக்குத் தேவையான உணவு மற்றும் தேவையான பொருட்களை வழங்க வேண்டும்.

வயதான, உடல் நலம் குன்றியவர்கள் பயணம் செய்யும்போது அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

எந்த நிலையிலும் பயணிகளிடம் கோபப் படாமல், பொறுமையாகவும் , கனிவாகவும் நடந்துகொள்ளவேண்டும். அவசரகாலத்தில் பயணிகளின் நலனுக்கு விமானப் பணிப் பெண்களே பொறுப்பாவார்கள். ஏதாவது ஒரு பட்டப்படிப்பு முடிந்திருக்க வேண்டும். சிறப்பான தோற்றமும், நல்ல கண் பார்வையும் முக்கியம். சர்வதேச ஆங்கில மொழித்திறன் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இவைதான் இந்தத் துறையில் நுழைய விரும்புபவர்களுக்கான அடிப்படைத் தகுதிகள்.

. இந்தியாவின் பல்வேறு நகரங்களில் இதற்கான பயிற்சி நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

விமானப் பணிப்பெண்கள் துறை பற்றிய ஒரு வருட டிப்ளோமா படிப்பில் சேருவதற்கு உரிய தகுதிகளுடன், அந்தந்த கல்வி நிறுவனங்கள் நடத்தும் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று, நேர்முகத் தேர்விலும் தேர்ச்சி பெறவேண்டும்.

பிராங்கிளின் ஏர் ஹோஸ்டல் டிரெய்னிங் அகடமி *(www.franfinn.com)* , ஏ.ஹெச்.ஏ.ஏர்கோஸ்டல் அகடமி (*www.airhostessacademy.com*) என்பன இதுபோன்ற கல்வி நிறுவனங்களில் சில வாகும்.

பணியில் சேர்ந்தவுடன் மாதம் 400 முதல் 500 டொலர் வரை சம்பளமாகக் கிடைக்கும். தலைமை விமானப் பணிப் பெண்களுக்கான சம்பளம் 1200 டொலரைத் தாண்டும்.

சர்வதேச தலைமை விமானப் பணிப் பெண்களுக்கு 1600 டொலர் வரை சம்பளம் உண்டு.

## அறிவுக் கலசம்

ஆர்.யூ.பாலமுருகன்

## நேரத்தை நிர்வகிக்க சில 'டிப்ஸ்'

காலம் கண் போன்றது. கடமை பொன் போன்றது என்பது பழமொழி. அதற்கேற்ப நாம் காலத்தின் அருமையை உணர்ந்து செய்யும் வேலையை சிறப்பாகவும், விரைவாகவும், சரியான நேரத்திலும் செய்ய வேண்டும்.

இன்றைய இயந்திர உலகில் நேரம் என்பது மிக முக்கியமானது. நேரத்தை தவற விடுவது, வாழ்க்கையை தொலைத்து விடுவதற்குச் சமம். நீங்கள் நேரத்தை எவ்வாறு கடைப்பிடிக்கவேண்டும்? எவ்வாறு நிர்வகிக்க வேண்டும்? என்பதற்கான 'டிப்ஸ்'

✡ ஒரு நாளைக்கு 24 மணிநேரம் தான் என்ற கால அளவு மாறப் போவதில்லை. அதனால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

✡ உங்களுடைய பயனுள்ள நேரம் எங்கு வீணாக செலவிடப்படுகிறது என்பதை கண்டறிய வேண்டும். எடுத்துக்காட்டாக சிலர் மொபைல் போனில் நீண்டநேரம் பேசுவார்கள் அல்லது இன்டர்நெட்டில் அதிகநேரம் செலவழிப்பார்கள் அல்லது டிவி பார்ப்பதில் நேரத்தை செலவிடுவார்கள். இவற்றில் எவ்வகையில் உங்களுடைய நேரம் வீணாக செலவிடப்படுகிறது என்ப தை அறிந்து தவிர்த்துவிடுங்கள்.

✡ நீங்கள் சரியான கால அளவை பின்பற்றுவதை, இலக்காக வைத்து கொள்ளுங்கள். இதன்மூலம் உங்கள் நடத்தையில் மாற்றம் ஏற்படும். உதாரணமாக, நான் காலை 10 மணிக்கு இந்த வேலையைத் தான் செய்ய வேண்டும் என உங்களது நேரத்தை வகுத்துக்கொள்ளுங்கள். முக்கியமாக, நேரத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று திட்டம் மட்டும் போடாமல், அதை செயல்படுத்த முனையுங்கள்.

✡ தினமும் எழும் நேரம் மற்றும் உறங்கும் நேரம் உள்ளிட்டவற்றை சரியான முறையில் வகைப்படுத்தி கொள்ளுங்கள்.

✡ மற்றவர்கள் கிண்டல் செய்வார்களோ என அஞ்சி, உங்களது கால அளவை மாற்றிக் கொள்ளாதீர்கள். உங்களது வேலையை சரியான நேரத்தில் வழக்கம் போலவே செய்யுங்கள்.

✡ இறுதியாக யாருக்காகவும் காத்திருந்து உங்களது நேரத்தை வீணாக்காதீர்கள்.

## பயோ டேட்டாவை வடிவமைப்பது எப்படி?

பல நிறுவனங்கள் முதற்கட்ட தேர்வாக சுயவிபரக் கோவையை (Bio Data /Curri culam Vitae) பரிசீலித்தே நேர்முகப்பரீட்சை, போட்டிப் பரீட்சைக்கு அழைக்கின்றனர். சுயவிபரக் கோவை நமது பணிக்கான அடிப்படையாக அமைகின்றது.

சுயவிபரக் கோவையை சிறப்புற வடிவமைப்பதற்கான சில யோசனைகள்.

♦ நுழைய விரும்பும் துறை சார்ந்த உங்களது அறிவுத்திறன்களை முறைப்படி வரிசைப்படுத்துங்கள். உங்கள் பயோடேட்டாவின் ஆரம்பத்திலேயே துறைசார்ந்த உங்கள் திறன்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

உங்களது பயோடேட்டாவை பரிசீலிப்பவர் அத்துறை சார்ந்த திறன் படைத்த ஒருவராகத் தான் இருக்கும். பொதுவாக இது போன்றவை நமது பயோடேட்டா சென்றடைவதற்கு முன்பு அவை பல்வேறு நபர்களாலும் 'கீவேர்ட் சேர்ச்' மூலமாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. எனவே சரியாக வரிசைப்படுத்துவது என்பது முக்கியம்.

♦ கல்வித் தகுதியைக் குறிப்பிடும்போது விண்ணப்பிக்கும் பதவிக்கு தொடர்புடைய தகுதியை அதிகமாகவும் அத்துறையுடன் தொடர்பில்லாத தகுதிகளை குறைந்தளவிலும் குறிப்பிடுவது அவசியம்.

தற்போது விண்ணப்பிக்கும் பணி அனுபவத்தை நீங்கள் பெற்றிருந்தால் அதை மறக்காமல் பயோடேட்டாவில் குறிப்பிட வேண்டும். ஆண்டு ரீதியான அனுபவத்தை குறிப்பிடுவது அவசியமல்ல என்பதை உணருங்கள்.

♦ பணி அனுபவத்தை எண்ணிக்கையாகக் குறிப்பிடுவது தவறு. ஆனால் அந்த அனுபவத்தில் நீங்கள் செய்துள்ள சாதனைகள் அல்லது அடைந்த இலக்குகளை எண்ணிக்கையாகக் குறிப்பிடலாம்.

நிதி நிலைமை, பட்ஜெட் நிதி சேமிப்பு, கால அவகாசம், செயல்திறன், முன்னேற்றம், பெரிய பிரச்சினைகளைக் களைந்தது, இயந்திரங்கள் நிர்வகித்தது. பணியோடு தொடர்புடைய சாதனைகள் ஆகியவற்றை எண்களின் அடிப்படையில் படியவிடலாம்.

♦ பயோ டேட்டா வரிகளை வினைச் சொல்லுடன் ஆரம்பிக்கலாம். செயற்தன்மை கொண்டவராகவும் அறிவுத்திறன் மிக்க பணிகளை வெற்றிகரமாக முடிக்கக் கூடியவராகவும் வெளிப்படுத்த வேண்டும். தற்போது பணி எதிலும் இருந்தால் அதன் தன்மை பற்றியும் குறிப்பிடலாம்.

♦ பயோடேட்டாவின் மூலம் உங்களை நீங்களே விளம்பரம் செய்து கொள்வது முக்கியம். அதைக் குறைவாகச் செய்து விடக்கூடாது. நம்மைப் பற்றி தேவையில்லாமல் உயர்த்திக் கூறுவது எப்படித் தவறோ, அதேபோல் நமது திறன்களை அடக்கி வாசிப்பதும் தவறுதான்.

உங்களது பயோடேட்டாதான் உங்களுக்கான ஒரே விளம்பரம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

தற்போது விண்ணப்பிக்கும் பணிக்கு சம்பந்தமில்லாத திறனை பலமாகப் பெற்றிருந்தால் அதையும் கட்டாயம் குறிப்பிடவேண்டும் .

(யோசனைகள் வரும்)

தூய்மையான மனச்சாட்சி இடிமுழக்கத்திலும் அச்சமின்றி துயிலும்.
-நாமஸ் முல்லர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## குடாநாட்டு மக்களை அதிர்சிக்குள்ளாக்கிய மாணவனின் படுகொலைச் சம்பவம்

சாவகச்சேரியில் மாணவன் திருச்செல்வம் கபில்நாத் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு யாழ்ப்பாண மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

யுத்தத்தினால் பேரிழப்புகளை சந்தித்த மக்கள் தங்கள் இழப்பின் துயரங்களை நினைந்து நினைந்து அழுது எலும்பும் தோலுமாகி இருக்கும் நிலையில்,

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் வைத்து கடத்தப்பட்ட கபில்நாத் என்ற மாணவன் நேற்று முன்தினம் புதைகுழியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யுத்தம் முடிந்து விட்டது என்று கூறப்படும் நேரத்தில் பிரஸ்தாப மாணவனுக்கு நடந்த இக்கொடூர சம்பவம் யாழ்ப்பாணத்தின் இருப்பை கேள்விக் குறியாக்கியுள்ளது.

குறித்த மாணவன் எதற்காக கடத்தப்பட்டான்? கடத்தியவர்கள் கோடிக்கணக்கான பணத்தை எதிர்பார்த்திருந்தால், மாணவனை கடத்தி வைத்திருந்து பணத்தை பெற முயற்சிக்காமல் கடத்திய உடனேயே கொலைசெய்தது ஏன்? இது போன்ற பல கேள்விகள் எழவே செய்கின்றன.

எதுவாயினும் மாணவனின் கடத்தல் மற்றும் கொலை தொடர்பான பொலிஸாரின் விசாரணைகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

நடந்த படுகொலைச் சம்பவத்தின் பின்னணி என்ன? என்பது தெளிவு படுத்தப்படாத நிலையில், உண்மைகள் பலவாறாகத் திரிபுபடும் சந்தர்ப்பம் உருவாகும்.

எனவே இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நேர்மையாக மேற்கொள்வதுடன் தமது கடமையை சரிவரச் செய்ய வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும்.

இதுபோன்ற சம்பவங்கள் குழுநிலையிலோ அன்றி தனிப்பட்டநிலையிலோ தொடர்வதை தடுக்கும் தார்மீகப் பொறுப்பு பொலிஸாருக்கும், நீதி பரிபாலனத்திற்கும் உண்டு.

பொலிஸார் விசாரணைகளை மந்தப்படுத்தினால் அல்லது திசை மாற்றினால் மக்கள் ஒருபோதும் பொலிஸாரை நம்பத் தலைப்படமாட்டார்கள்.

உண்மைகள் உண்மைகளாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இதற்காக அனைவரும் ஒத்துழைப்பது அவசியம்.

அதேநேரம் மாணவனின் படுகொலைச் சம்பவம் தேர்தல் காலத்தில் நடந்துள்ளமையினால், இதனை அரசியல் இலாபம் தேடுவதற்கு பயன்படுத்தாமல் தங்கள் பிள்ளையை இழந்து தவிக்கும் பெற்றோரின் துயர நிலையை உணர்ந்து, நடந்த கொடூர சம்பவத்தால் அதிர்ச்சியில் மூழ்கி இருக்கும் குடாநாட்டு மக்களின் பரிதாபநிலை உணர்ந்து அனைவரும் ஒன்று சேர்ந்து உண்மையை வெளிக்கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும் என்பது நீதியின்பால் கேட்கப்படுகின்றது.

# பங்குனி மாதமும் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் பொங்கல் திருவிழாவும்

பங்குனி மாதத்தில் மட்டுவில் கிராமம் ஓர் எழுச்சிக் கோலம் கொண்டு விளங்குவது யாவரும் அறிந்த உண்மையாகும். இது மட்டுவிலுக்குப் பெருமை தருகின்ற காரணிகளுள் முக்கியமாக ஒன்றாகவும் விளங்குகின்றது. ஆம், மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் திருவிழா நிகழ்வுகளால் மட்டுவில் மிகவும் சிறப்புப் பெறுகின்றது.

திங்கள் என்னும் பதம் பல பொருள்களில் பேசப் பெறுகிறது. இங்கே பங்குனித் திங்கள் என்று எடுத்துக் கொண்டால் பங்குனி மாதத்தையும் பங்குனித் திங்கட்கிழமையையும் கருத்திற் கொள்ளலாம். மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவிலைப் பொறுத்தவரை பங்குனித் திங்கள் இருவழியிலும் சிறப்புப்பெறுகின்றது. இந்த ஆலயத்தில் பங்குனி மாதத்தில் எல்லா நாட்களிலுமே பக்தர்கள் வந்து தரிசனம் செய்வதை முக்கியமாகக் கொள்ளுகின்றார்கள். அதனால் பங்குனி மாதம் சிறப்புப் பெறுகிறது.

பொதுவாகத் திங்கட்கிழமை நாட்களிலே இக்கோவிலில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுவதனால் பங்குனித் திங்கட்கிழமைகள் சிறப்புப் பெறுகின்றன என்பது மற்றொன்று. இனி இந்தப் பங்குனி மாதத்தின் வேறு பல முக்கிய சமய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

பரந்த நெல்வயல்களைக் கொண்ட இக்கிராமத்தில் மாசி, பங்குனி மாதங்களில் நெல் அறுவடை செய்தும் காய்கறி பயிர்கள் செய்தும் பயன்பெறுங் காலத்தில் பராசத்திக்கு விழா எடுப்பதும் பொங்கல் செய்வதும் நமது சிந்தனைக்குரிய ஒன்றாகும்.

பல ஊர்களிலுமிருந்து அடியார்களைக் கவர்ந்து கொள்ளும் வகையில் பங்குனி மாதத்தில் பொங்கல் விழாவையும் திருவிழாவையும் பழைய காலந்தொடக்கம் நடைமுறைப்படுத்திப் பன்றித்தலைச்சி அம்மனுக்குத் தமது நன்றிக் கடனைச் செலுத்தி வருகிறார்கள் இவ்வூர் மக்கள்.

மேலும் பங்குனி மாதப் பூரணையில் வரும் உத்தர நட்சத்திர நன்னாளில் பார்வதி கல்யாணம் நடைபெற்றதாகச் சைவமக்கள் போற்றிப் பூசனை புரிவதும் இந்தப் பங்குனி மாதத்தின் விசேடமாகும்.

இறந்த பூம்பாவையை உயிர்பெற்றெழப் பாடுஞ் சந்தர்ப்பத்தில் அந்த நிகழ்ச்சி பங்குனி உத்தரத்துக்கு முன் நடைபெற்றதென்பதை நினைவுகூர்ந்து திருஞான சம்பந்தர்,

**பலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்**
**கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்**
**பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்தர நாள்**
**ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் !**

என்று பங்குனி உத்தர மகிமையைச் சைவ உலகம் உணர வைப்பதும் காண்போமாக.

அன்றியும் இமவான் தன்மகள் பார்வதியை இறைவனுக்கு மணஞ் செய்துவைக்க உகந்த தினம் பங்குனி உத்தரம் எனக் கச்சியப்பர் பின்வருமாறு பாடியிருப்பதுவும் நமது சிந்தனைக்குரியது.

**ஆதியின் உலகமெல்லாம் அளித்திடும் அன்னை தன்னைக்**
**காதலின் வதுவை செய்யக் கருதினை கணித நூலோர்**
**ஓதுபங்குனியின் திங்கள் உத்தரம் இன்றே யாகும்**
**ஈது நன் முகூர்த்தம் எய்தாய் இமயமேல் வருதி என்றான்.**

இன்னும், வருடத்தின் 12 ஆம் மாதம் பங்குனியாக் இருப்பது போல உத்தர நட்சத்திரம் 12 ஆவது இடத்தில் இருப்பதுவும் ஒரு விசேடமாகும். இவ்வருட பங்குனி உத்தரமே திங்கட்கிழமையில் அமைந்திருக்கிறது.!

பங்குனித் திங்கட்கிழமையிலேயே தொடங்கும் பங்குனிப் பொங்கல் விழா இவ்வருடம் ஐந்து திங்களைக் கொண்டு இருப்பதும் கவனிக்கத்தக்கது.

நா.நல்லதம்பி
மட்டுவில்

கடந்த பல ஆண்டுகளாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் மாலைக் காலத்திற்கு முன்பே முடிபு பெற்ற பொங்கல் விழாவும் திருவிழாவும் இவ்வாண்டு முற்காலம் போன்று நல்ல முறையில் நடைபெறும் என எதிர்பார்ப்போமாக.

அத்துடன் பல ஊர்களில் இருந்து அடியார்கள் இலகுவாக வந்து ஆலய தரிசனமும் பொங்கலும் செய்து திரும்பக்கூடிய தாக போக்குவரத்து ஒழுங்குகளும் இம்முறையும் செய்யப்பட்டுள்ளது.

எனவே புதுப்பொலிவுடன் காட்சி தரும் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மனை தரிசித்து அருளைப் பெறுவதற்கு எல்லாம் வல்ல அன்னை நமக்கு அருள்புரிவாராக.

# ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக அரச ஊடகங்கள் செயற்படுகின்றன

## கருணாசேன கொடித்துவக்கு கண்டனம்

(கொழும்பு)

அரசு ஊடகங்கனை தமக்கு எதிராக திருப்பிவிட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று ஊடகங்களை அரசு எமக்கு எதிராக திருப்பிவிட்டுள்ளது. அவர்கள் பொய்யான தகவல்களை தெரிவிக்கின்றனர். டலஸ் அழகப்பெருமவின் திட்டத்தின் அடிப்படையில் எம்மீது மேற்குலகத்தின் சாயம் பூசப்பட்டுள்ளது.

ஆனால் நாம் கொரியா, யப்பான் ஆகிய நாடுகளுடன் நல்ல உறவுகளை கொண்டிருந்தோம். 1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் அதிக அபிவிருத்திகளை மேற்கொண்ட நாடாக யப்பான் திகழ்ந்தது.

இலங்கையில் அது அதிக முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. பொது நலவாய நாடுகளுடனும் நாம் வலுவான உறவுகளை கொண்டிருந்தோம். எனவே நாம் மேற்குலகத்திற்கு மட்டும் ஆதரவானவர்கள் என்ற முத்திரை பலவந்தமாக சுமத்தப்பட்டுள்ளது. ஐ.தே.க. மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தனது ஆட்சிக் காலத்தில் 3 தடவை கொண்டிருந்தது.

ஆனால் தற்போதைய அரசுக்கு யாரும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கப்போவதில்லை. அரசியல் சீர்திருத்தங்களை எதிர்க்கட்சிகளின் உதவியுடன் மேற் கொள்ள முடியும். 17 ஆவது திருத்தச்சட்டத்திற்கும் அரச தரப்பு உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளும் இணைந்து வாக்களித்திருந்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

## சபாநாயகருக்கு ரணில் கடிதம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் லொக்கு பண்டாரவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இடை விலகி அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஜோன்சன் பெர்னான்டோ இந்திக்க பண்டாரநாயக்கா ஆகியோர் தொடர்புடையதாகவே இக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மாட்டார்கள் என அண்மையில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க சபாநாயகருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இவ்விருவர்களினதும் நாடாளுமன்ற பதவிக்காக ஐக்கிய தேசியக்கட்சியின் சி.எம்.பண்டாரநாயக்கா மற்றும் அனுர ஹேரம்பகல ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்து தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா வர்த்தமானியில் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்புகளின்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இந்நிலையில் ஜோன்சன் பெர்னான்டோ, இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக செயற்பட முடியாது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-9)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## மதமும் ஒழுக்கமும்

ஒருவர் இரசாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு பெரிய விஞ்ஞானியாக இருக்கிறார். அவர் உன்னிடம் வந்து இரசாயனத்தைப் பற்றி சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். "நான் இரசாயன விஞ்ஞானியாகத் திகழ வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்திருக்கிறேன். ஆனால் அப்படியிருந்தும் என் முயற்சியில் நான் ஒன்றும் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. எனவே இரசாயனத்தைப் பற்றிய எதையும் நான் நம்புவதில்லை" என்று நீ அவரிடம் சொல்வாயானால் அவர் உன்னைத் திருப்பி, "நான் தூங்கச் செல்லும் போது 'ஓ இரசாயனமே என்னிடம் வா' என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தேன். அது என்னிடம் வரவேயில்லை" என நீ சொல்வாய். இரசாயன விஞ்ஞானி உன்னைப் பார்த்து சிரித்து விட்டு , அப்பனே! இரசாயனத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அது வழியே அல்ல.

# இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகளை பாகிஸ்தான் தொடர்ந்து ஆதரிக்கிறது



## ப.சிதம்பரம் குற்றச்சாட்டு

டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் சட்டத்தரணிகளின் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட உள் துறை அமைச்சர் ப.சிதம்பரம் பேசியதாவது,

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் தொடர்ந்து தீவிர வாதிகளைத் தூண்டி வருகிறது. அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கிறது. அதே சமயம் நமது பாதுகாப்பு படையினர் தீவிரவாதிகளின் எந்த தாக்கு தலையும் எதிர்கொள்ளும் திறன் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

நாடுகளைப் போல் தீவிரவாதிகள் மீது மென்மையான அணுகுமுறை கொள்ள முடியாது.

தீவிரவாதிகளுக்கு எதிரான எந்த தாக்குதலையும் நாம் முறியடிப்போம் என்று உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறேன்.

ஒவ்வொருவரும் முன் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் .

அப்படிச் செயல்பட்டால் தான் நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள முடியும் . இவ்வாறு ப.சிதம்பரம் பேசினார். (2-6)

# நடுக்கடலில் ஆபத்தில் சிக்கும் மீனவர்களை மீட்க புதிய கருவி

(சென்னை)

நடுக்கடலில் ஆபத்தில் சிக்கும் மீனவர் களைக் கண்டுபிடித்து மீட்கப் புதிய கருவி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்திய கட லோரக் காவல் படை, கப்பல் படை, விமானப் படை வீரர்கள் இணைந்து இந்த மீட்பு நடவடிக்கைகள் குறித்த ஒத்திகையை நேற்று முன்தினம் நடத்தினர்.

நடுக்கடலில் தத்தளிப்பவர்களை விமா னம், ஹெலிகொப்டர், படகு மூலம் மீட்பது, அவர்களுக்கு சிகிச்சை அளிப்பது, மருத்து வமனைக்குக் கொண்டு செல்வது போன்ற வற்றை தத்ரூபமாக செய்து காட்டினர். சென்னை அரசு பொது மருத்துவமனை டாக்டர்களும் இதில் பங்கேற்றனர்.

இது குறித்து தென் மண்டல கடலோர காவல்படை கமாண்டர் ராஜசேகர் கூறும் போது,

நடுக்கடலில் ஆபத்தில் சிக்கும் மீனவர் களை உடனடியாக மீட்க எமர்ஜென்சி லொ கேட்டிங் டிரான்ஸ்மிஷன் (இ.எல்.டி) என்ற புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.10 ஆயிரம்.

கடலுக்குள் செல்பவர் களுக்கு ஆபத்து ஏற்படும்போது இந்த கருவியை ஒன் செய் தால் போதும். இதில் இருந்து வரும் சிக்னல்கள் செயற்கைக்கோள் மூலம் அருகில் உள்ள கப்பல்களுக்கும் மும்பை, கொல்கத்தா, சென் னை, பெங்களூரில் உள்ள கட்டுப்பாட்டு அறை களுக்கும் உடனடியாக தெரிவிக்கப்படும்.

தகவல் கிடைத்த 15 நிமிடத்துக்குள் மீன வர்கள் மீட்கப்படுவார்கள். இந்தக் கருவியை சலுகை விலையில் மீனவர்களுக்கு வழங்க மத்திய, மாநில அரசுகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளோம்.தேடல் மற்றும் மீட்புப் பணி களுக்காக சென்னை கடலோர காவல் படைக் கென புதிதாக 2 கப்பல்கள் வாங்கப்படு கின்றன என்றார். (2-6)

# ஈழப்பெண் தீக்குளிப்புக்கு பொலிஸாரே காரணம்

## பா.ஜ.க.

(கரூர்)

ராயனூர் அகதிகள் முகாமில் இருந்த பத்மா என்ற பெண் தீக்குளிப்பதற்கு பொலிஸாரே காரணம் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதா வது, பத்மா அவருடைய கணவர் மீதான கொலை வழக்கு தொடர்பாக விசாரிப்பதற்காக அழைத் துச் சென்றபோது, பாலியல் பலாத்காரம் நடந்ததாக குற்றம் சாட்டியிருக்கிறார்.

அருகில் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அவர் தனது அறிக்கையில் மேலும் கூறியுள்ளார். (2-6)




# கடந்த 50 ஆண்டுகளில் இமயமலையில் 16 சதவீத பனிக்கட்டி படலம் உருகியுள்ளது

## இஸ்ரோ தகவல்

(பெங்களூர்)

பெங்களூரில் உள்ள இந்திய விண் வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) விண்வெளித்துறை இலாகாவின் சார்பில் வருடாந்திர அறிக்கை வெளியிடப்பட்டது.

இதில் , இமயமலையில் உள்ள பனிக் கட்டி படலங்கள் பற்றி நடத்தப்பட்ட ஆய்வு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரோவின் இமயமலை பனிக்கட்டி படல ஆய்விற்கு இமாச்சல பிரதேசம், உத்த ராஞ்சல் , ஜம்மு காஷ்மீர், சிக்கிம் ஆகிய 4 மாநிலங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பனிக்கட்டி படலங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்படி 1962 ஆம் ஆண்டு இமய மலையில் உள்ள 10 பனிக்கட்டி பள்ளத் தாக்குகளில் 5ஆயிரத்து 866 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிற்கு 1317 பனிக்கட்டி படலங் கள் இருந்ததும், ஆனால் இது தற்போது 4 ஆயிரத்து 921 சதுரகிலோ மீற்றர்களாக குறைந்து போய்விட்டதும் தெரியவந்துள் ளது. அதாவது கடந்த 50 ஆண்டுகாலத்தில் 16 சதவீத பனிக்கட்டி படலங்கள் இமயமலை யில் உருகிப் போய்விட்டன.

பூமி வேகமாக வெப்பமடைந்து வருவதன் காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டிருப்பதாக இஸ்ரோ விஞ்ஞானிகளின் ஆய்வறிக்கை யில் கூறப்பட்டுள்ளது. (2-6)

# அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் பிருத்வி, தனுஷ் ஏவுகணைகள்

## இந்தியா வெற்றிகரமாக சோதனை



(பாலசோர்)

அணு ஆயுதங்களை சுமந்து சென்று எதிரி இலக்குகளை அழிக்கும் பிருத்வி -2 மற்றும் தனுஷ் ஆகிய ஏவுகணை சோதனைகள் நேற்று முன்தினம் ஒரேநாளில் வெற்றி கரமாக நடந்தன.

இந்திய இராணுவம் கடற்படை மற்றும் விமானப்படைக்கு தேவையான ஏவுகணை களை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆணையம் தயாரித்து வருகிறது. அவ்வாறு தயாரிக்கப்படும் ஏவுகணைகளை பல முறை பரிசோதித்த பிறகு முறைப்படி இராணுவத்தில் சேர்க்கப்படும். அதற்காக ஒரிசா மாநிலம் பாலசோர் கடற்கரை அருகே சந்திப்பூர் என்ற இடத்தில் தனி சோதனை மையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்த மையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 5.48 மணிக்கு பிருத்வி -2 ஏவு கணை சோதனை நடத்தப்பட்டது. அங்குள்ள 3ஆவது சோதனை வளாகத்தில் இருந்து மொபைல் ஏவுதளத்தில் இருந்து இவ் ஏவுகணை செலுத்தப்பட்டது. கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைக்கு ரேடார் மூல மாக சரியான வழியைக் காட்டுவதற்காக பல்நோக்கு ரேடார் வசதியை கொண்ட போர்க் கப்பல் ஒன்றை வங்கக் கடலில் நிறுத்தி இருந் தனர்.

அதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இலக்கை மிகச்சரியாக பிருத்வி -2 ஏவுகணை தாக்கி அழித்தது. சோதனை வெற்றிகரமாக முடிந் தது. 9 மீற்றர் நீளமும் ஒரு மீற்றர் விட்டமும் கொண்ட இவ் ஏவுகணை சுமார் 300 கி.மீ. தூரம் வரை பாய்ந்து சென்று தாக்கும் ஆற்றல் கொண்டது. அந்த ஏவுகணையில் அணு ஆயுதங்களை பொருத்த முடியும். ஏவுகணையில் குறைந்தது 250 கிலோ முதல் அதிகபட்சமாக 700 கிலோ எடை வரை யிலும் அணு ஆயுதங்களை ஏற்றலாம். அந்த அளவை ஆயிரம் கிலோ அளவுக்கு அதிகரிப்பதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

பிருத்வி -2 ஏவுகணை சோதனை நடை பெறுவதற்கு சுமார் 4 நிமிடங்களுக்கு முன்பு அதிகாலை 5.44 மணி அளவில் தனுஷ் என்ற மற்றொரு ஏவுகணை சோதனையும் வெற்றிகரமாக முடிந்தது. இது கடலிலேயே மற்றொரு இலக்கை தாக்கும் சக்தி வாய்ந் தது.

மேலும் இவ் ஏவுகணை பிருத்வி ஏவு கணையின் கடற்படை பிரிவைச் சேர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

(சென்னை)

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டி ருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தி யுள்ளனர்.


நேற்று முன்தினம் கச்சதீவு அருகே இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 17 படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த னர். அப்போது 5 நவீன படகுகளில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்கள் மீது திடீரென தாக்குதல் நடத்தினர்.

மேலும் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த ஏராளமான மீன்களையும் அவர்கள் அள்ளிச் சென்றனர். இதையடுத்து பல படகுகள் குறைந்தளவு மீன்களுடன் கரை திரும்பின.

இதை இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சங்கத்தின் தகவல்கள் தெரி விக்கின்றன. (2-6)

# தமிழனை ஆதரிக்க மறுக்கும் தமிழன்

## சீமான் சீற்றம்



(மேலூர்)

தமிழனையே தமிழன் ஆதரிக்க மறுக்கிறான் என மேலூரில் நடந்த கக்கன் நூற்றா ண்டு விழாவில் சினிமா இயக்குநர் சீமான் பேசி னார்.


அவர் பேசியதாவது,

இலங்கையில் நடந்த போரில் புலிகளின் பின்னடைவுக்கு காரணம் இங்குள்ள தமி ழர்கள் தான். தமிழனை தமிழனே ஆதரிக்க மறுக்கிறான்.

கருணாநிதிக்கும் ஜெயலலிதாவிற்கும் பிரபா கரனை பிடிக்காது. கடத்தல் காரணமாக இருந் தாலும் வீரப்பன் கண்ணியமாக பெண் களிடம் நடந்துகொண்டான். விசாரணை என்ற பெயரில் அதிரடிப்படை தான் பெண்க ளின் கற்பை சூறையாடியது. இவ்வாறு சீமான் பேசினார்.

கூட்டம் நடத்த பொலிஸார் தடை விதித்து இருந்ததால் மேல்நீதிமன்றில் மனுசெய்து இக் கூட்டத்தை நடத்தினர். மதியம் 1.30 மணிக்குள் கூட்டத்தை முடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் பொலிஸாரின் எச்சரிக்கைக்கு பிறகு 2.20க்கு கூட்டம் முடிக்கப்பட்டது. (2-6)

# ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றி; சென்னை அணிக்கு தொடரும் சோகம்


நாமன் ஓஜா

(அகமதாபாத்)

நாமன் ஓஜாவின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 17 ஓட் டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று அகமதாபாத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 24ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஓஜாவின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நாமன் ஓஜா 49 பந்துகளில் (6 பவுண்டரி கள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 80 ஓட்டங்களையும் லூம்ப் 16 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 30 ஓட்டங்களையும் வோக்ஸ் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அல்பி மோர்கல், திலான் துஷார மற்றும் ஜகதி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 178 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 160 ஓட்டங்களைமாத்திரமெடுத்து 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் முரளி விஜய் 28 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் 12 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 28 ஓட்டங்களையும் சுப்பிரமணியம் பத்ரிநாத் 25, அணித்தலைவர் தோனி 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷேன்தைட் 2 விக்கெட்டுக்களையும் யூசுப்பதான், அணித்தலைவர் ஷேன்வோர்ன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு வழியமைத்த ஓஜா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 7 ஆவது போட்டியில் 4ஆவது வெற்றியை பதிவு செய்து 8 புள்ளிகளுடன் உள்ளது.

இதேவேளை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 7ஆவது போட்டியில் 5ஆவது தோல்வியைச் சந்தித்தது.

## ஓய்வு பெறுகிறார் மொகமெட் யூசுப்



சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் முகமெட்யூசுப் ஓய்வு பெறவுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர் முகமெட் யூசுப் இதுவரை 88 டெஸ்ட் (7431 ஓட்டங்கள்), 282 ஒரு நாள் (9624 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடியுள்ளார். சமீபத்தில் நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணிக்கு யூசுப் அணித்தலைவராக செயல்பட்டார்.

இத் தொடர்களில் பாகிஸ்தான் மோசமான தோல்வியையும் பதிவு செய்தது. இதனையடுத்து முகமெட் யூசுப், யூனிஸ் கான் இருவருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆயுள்தடைவிதித்தது.

இதனால் அதிருப்தி அடைந்த முகமெட் யூசுப் ஓய்வு பெறவுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. தனது ஓய்வு அறிவிப்பை இன்று முறைப்படி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மெதுவாகப் பந்துவீச்சு; சங்கக்காரவுக்கு போட்டித்தடை

(மொகாலி)

ஐ.பி.எல். தொடரில் மொகாலியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வென்றது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பெற்ற 3 ஆவது வெற்றி இதுவாகும். கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 5ஆவது தோல்வியை சந்தித்தது.

இந்த போட்டியின் போது கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி குறிப்பிட்ட நேரத்தில் பந்து வீச முடியவில்லை. மெதுவாக பந்து வீசியதாக அந்த அணி மீது குற்றம் சாட்டப்பட்டது.

ஏற்கனவே 2 முறை அந்த அணி மெதுவாக பந்து வீசி உள்ளது. இதைத் தொடர்ந்து மெதுவாக பந்து வீசியதற்காக கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணித் தலைவர் சங்கக்காரவுக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை ஐ.பி.எல். தலைமை நிர்வாகி சுந்தர் ராமன் தெரிவித்தார்.

மெதுவாக பந்து வீசியதற்காக சங்கக்காரவுக்கு முதலில் ரூபாய் 10 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. கடந்த 24ஆம் திகதி ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியின் போது மெதுவாக பந்து வீசியதற்காக அவருக்கு ரூபாய் 20 இலட்சமும், கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி வீரர்களுக்கு ரூபாய் 5 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டு இருந்தது.

டெண்டுல்கர், கங்குலி, காம்பீர் ஆகியோர் மீது இதே குற்றச்சாட்டுக்காக தலா ரூபாய் 10 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

6 ஆட்டத்தில் 5 தோல்வியை சந்தித்த பஞ்ஜாப் அணி அடுத்த ஆட்டத்தில் மும்பை அணியை நாளை எதிர் கொள்கிறது.

# ஹர்பஜன் சகலதுறையிலும் ஜொலிப்பு; டெக்கான் அணியை வீழ்த்தியது மும்பை

(மும்பை)

ஹர்பஜன் சிங்கின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் நேற்று மும்பையில் நடைபெற்ற லீக் சுற்றின் 25ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி டெண்டுல்கர், ஹர்பஜன் சிங்கின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 172 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் 43 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 55 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 49 ஓட்டங்களையும் பிரவோ 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆர்.பி.சிங். 3 விக்கெட்டுக்களையும் ஜாஸ்கரன் சிங், பிரஜன் ஓஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 173 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 17.4 ஓவர்களில் 131 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ரோகித் சர்மா 28 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் ஹேர்சல் கிப்ஸ் 16 (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 27 ஓட்டங்களையும் ரி.சுமன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங், சகீர்கான், மலிங்க ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பொல்லார்ட் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியில் சகல துறையிலும் ஜொலித்து மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு வழியமைத்த ஹர்பஜன் சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 6ஆவது போட்டியில் 5ஆவது வெற்றியைப் பெற்று 10 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்ந்தும் உள்ளது.

இதேவேளை டெக்கான் சார்ஜஸ் அணி தான் விளையாடிய 6 ஆவது போட்டியில் 3 ஆவது தோல்வியைச்சந்தித்தது.

# மாணவன் படுகொலை பூரண விசாரணை தேவை

## ஸ்ரீகாந்தா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்த மாணவன் தி.கபில்நாத் கடத்தப்பட்டு கப்பம் கோரப்பட்ட பின்னர் சடலமாக மீட்கப்பட்டிருக்கும் பயங்கரச் சம்பவம் மனச்சாட்சி உள்ள அனைவராலும் கண்டிக்கப்படுகின்றது.

இவ்வாறு தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணப் பிரதேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கும் இந்த அக்கிரமத்தின் பின்னணி வெளிப்படுத்தப்படவேண்டும்.

பூரணமாக புலன் விசாரணை நடத்தப்பட்டு இந்த பயங்கர குற்றச் செயலில் சம்பந்தப்பட்டுள்ள சகல குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படுவதை பொலிஸ் மாஅதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

எமது சமூகத்தில் அராஜகம் என்பது அடியோடு ஒழிக்கப்படுவதற்கும், சகல சமூக விரோத சக்திகளும் அடக்கி ஒடுக்கப்படுவதற்கும், நாம் அனைவரும் வேறுபாடுகளை மறந்து விழிப்புணர்வுடன் செயற்பட்டாக வேண்டும்.

தமது இளம் பிள்ளையை பறிகொடுத்து பரிதவிக்கும் பெற்றார்களினதும் மற்றும் கபில்நாத்தின் உறவினர்கள், நண்பர்கள் அனைவரினதும் ஆழ்ந்த துயரினை நாங்களும் பகிர்ந்து கொள்கின்றோம். (ந)

# மாணவனின் படுகொலை வன்முறை நோக்கிய செயல்

## ஈ.பி.டி.பி. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடு இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் தருணம் பார்த்து மிகக் கொடுமையான முறையில் நடத்தப்பட்டிருக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனான திருச்செல்வம் கபில்நாத்தின் படுகொலை என்பது யாழ்.குடாநாட்டை மறுபடியும் வன்முறைக் கலாசாரத்தை நோக்கி திசை திரும்பி விடும் செயலாகும்.

இப் படுகொலைச் சம்பவமானது தேர்தல் கால வன்முறைச் சம்பவங்களோடு தொடர்புபட்ட ஒரு நிகழ்வாகவே தெரியவந்துள்ளது. இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி விடுத்துள்ள ஊடகங்களுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்நிலையில் மாற்றங்களை உருவாக்குவதற்காக நடத்தப்படும் தேர்தலில் சமூக விரோத செயல்களில் ஈடுபடும் தீயசக்திகளும் போட்டியிடும் செயலானது சமூக விரோத சக்திகளுக்கு வேட்பாளர் என்ற அந்தஸ்தை கொடுக்கும் ஆபத்து நிறைந்த செயலாகும்.

கடத்தப்பட்டிருந்த மாணவனின் தந்தையாரான வர்த்தகர் திருச்செல்வம் ஏற்கனவே தனது மகனை தேடி கண்டுபிடிப்பதற்கு உதவுமாறு தன்னிடம் வந்திருந்ததை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு எடுத்துக் கூறியதோடு, இச்சம்பவத்தில் ஈடுபட்ட சமூக விரோத சக்திகளை பாரபட்சமின்றி நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்றும் சட்டம், நீதி ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் இதுபோன்ற கொடூரமான செயல்கள் தொடர்ந்தும் நடவாது பாதுகாப்பதற்காக தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டுமென்றும் பணிப்புரை விடுத்துள்ளார். இதேவேளை மாணவனின் இறுதி நிகழ்விலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார் என அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# சம்பூர் அனல்மின் நிலையத்திற்கான அனுமதியை வழங்க அரசு பின்னடிப்பு

இந்தியாவின் ஆதரவுடன் சம்பூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த அனல்மின் நிலையத்திற்கான அனுமதிகளை வழங்குவதற்கு இலங்கை நீதி ஆணையாளர் அலுவலகம் பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகள் மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நீதி ஆணையாளர் நாயகத்தின் அனுமதிகளை அரசு பெறுவது அவசியம்.

இந் நிலையில் இந்திய அரசு சம்பூரில் அமைக்கத் திட்டமிட்டிருந்த அனல்மின் நிலையத்திற்கான அனுமதிகளை வழங்குவதற்கு நீதி ஆணையாளர் அலுவலகம் பின்னடிப்பதாகத் தெரிய வருகின்றது. (ச-5)

## க.பொ.த. (சா/த) பெறுபேறு...

5 இலட்சத்து 45 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இந்தப் பரீட்சையின் போது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக சுமார் 2 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்ததாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்த முறைகேடுகள் தொடர்பாக மாணவர்கள் மற்றும் சில ஆசிரியர்கள் மீதும் ஆலோசனைகளை மீறும் வகையில் செயற்பட்டதாக முறைகேடுகள் தொடர்பாக மாணவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தமது பிள்ளை சாதாரண தரப் பரீட்சையில் தோற்றுவது தொடர்பாக அறிவிக்காமல் பரீட்சை நிலையங்களில் கடமையில் ஈடுபட்டமை தொடர்பாக சில ஆசிரியர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (ச-3)

## அரச சார்பற்ற நிறுவனங்...

அரசின் இந்த உத்தரவு உதவி அமைப்பு பணியாளர்களிடம் மிகுந்த ஆச்சரியத்தைத் தோற்றுவித்துள்ளது. எனினும் பொன்சேகா மீதான விசாரணைகளின் ஒரு பகுதியாக இது இருக்கலாம் என சில பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அரச தரப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ள போதும் அது எந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள என்பது குறித்து அவர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

எனினும் அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கனடாவைச் சேர்ந்த உதவி அமைப்பொன்று கனடா தூதரகத்தின் ஊடாக தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இது அமைப்புக்களின் தனிப்பட்ட விடயங்களில் தலையிடும் செயல் என அது தெரிவித்துள்ளது.

இதனிடையே அரச சார்பற்ற நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்கும் அதிகாரம் மத்திய வங்கிக்கு மட்டுமே உண்டு என உள்ளூர் உதவி அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. இந்த அமைப்புக்களும் கடிதங்களைப் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-1)

## பான் கீ...

சந்தர்ப்பம் வழங்குமாறு விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இராணுவ நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ள நபர் ஒருவரிடம் வெளிநாட்டு இராஜதந்திரிகள் சந்திப்புக்களை நடத்த ஒருபோதும் அனுமதிக்க முடியாதென அரசாங்கத் தரப்பு அறிவித்துள்ளது. (எ-1)

## சந்தேக...

கச்சேரி நீதவான், கொலையுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் நபரை உடனடியாகக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துமாறு பணித்துள்ளார்.

இம் மாணவனைக் கடத்திய குழு 3 கோடி ரூபாயினைக் கப்பமாகக் கோரியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## சரத் பொன்..

தலைமையாளர் மேஜர் ஜெனரல் லலித் தோலகல மற்றும் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க ஆகியோர் உறுப்பினர்களாகப் பணியாற்றுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சரத் பொன்சேகாவுக்கு எதிரான இரண்டு வழக்குகளுக்கும் ஒரு குழு நியமிக்கப்பட்டமை சட்டத்திற்கு விரோதமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்தே இந்தப் புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## வரதராஜப்...

1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியபோது அதனுடன் கூடவே இந்தியாவுக்குச் சென்ற வரதராஜப் பெருமாள் 2000 ஆம் ஆண்டு மீண்டும் இலங்கைக்கு வந்து அன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து பொதுத் தேர்தல் நடவடிக்கைகளில் அன்றைய ஆளும் கட்சிக்கு வாக்குச் சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டிய பின்னர் நாட்டை விட்டு மீண்டும் வெளியேறி இந்தியா சென்றார்.

மீண்டும் தற்போது இலங்கைக்கான பயணத்தினை மேற்கொண்டுள்ள அவர் ஈ.பி. ஆர்.எல்.எவ். வரதர் அணியின் பரப்புரைக்காக தேர்தல் களத்தில் செயற்படுவார் என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## புதிய அரசியலமைப்பு ஒன்...

மகிந்த சிந்தனை எதிர்கால இலக்கின் ஊடாக நீதிமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் பொறுப்புக் கூறும் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி முறைமையையே எதிர்பார்ப்பதாகவும் அரசாங்கம் தெரிவிக்கின்றது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர் முழுமையான அரசியல் அமைப்பு மாற்றத்தைக் கொண்டு வர அரசாங்கம் திட்டமிடவில்லை எனவும் அது குறித்து ஆராயும் பொறுப்பை நாடாளுமன்றத்திற்கு வழங்க எண்ணியுள்ளதாகவும் கூறினார்.

வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாக அரசாங்கம் அரசியல் அமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ளப் போவதாகவும் அது நாட்டின் ஒருமைப்பாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் வெளியாகும் கருத்துக்களை அமைச்சர் நிராகரித்தார்.

அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அது குறித்து ஆராயப்பட்டு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் அமைப்பிலுள்ள சரத்துகளுக்கு அமைய புதிய அரசியல் அமைப்பொன்றை எவராலும் கொண்டு வர முடியாது என சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார். (எ-3)





தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பை விருத்தி செய்யும் திட்டத்திற்கு 5.2 மில்லியன் டொலர் நிதியுதவியை உலகவங்கியும் இலங்கை அரசாங்கமும் ICTA அமைப்பினூடாக வழங்குகின்றது.-*செயற்திட்ட இணைப்பாளர் ,ICTA*
நீங்களும் இத் திட்டத்தின் கீழ் பயன் பெறவிரும்பின் இல.324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள MCS நிறுவனத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.
(சி-4922)

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !
மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின்
BIT
பயிற்சி நெறி இப்போது...
யாழ் மண்ணில் ESOFT இல் மட்டுமே...
விண்ணப்ப முடிவுத் திகதி 12.04.2010
ESOFT The Leader in Professional ICT Education
114, Navalar Road, Jaffna.
Call @ 021 222 4142
077 309 9 308
(சி-4799)

+ Royal Veterinary Clinic +
(Private)
றோயல் கால்நடை வைத்திய நிலையம்
(தனியார்)
மேற்படி நிலையம் தனது சேவையை பின்வரும் முகவரியில் ஆரம்பித்துள்ளது.
பழைய தபால் நிலையம்,
திருநெல்வேலிச் சந்தி, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
இந்நிலையம் சனி, ஞாயிறு உட்பட விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்.








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.